# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/=

இதழ் - 73

01.09.2024



# வடக்சில் சிறப்பாக நடந்த சிறு தானியத் திரு விழா




குளங்களை மையப்படுத்திய சிங்கள குடியேற்ற திட்டங்கள் 08



இலங்கைப் பொருளாதாரத்திற்கு கைகொடுக்கும் நல்லூர் திருவிழா 10



தங்கத்தை புதைத்து வைத்துள்ள பனை 14

# வெற்றிகரமாகப் பலசரக்கு கடை ஒன்றை நடத்துவதற்கு



வேதநாயகம் தபேந்திரன்




அது பணவசதி உள்ளவர்கள் கணிசமானோர் வாழும் பெரிய கிராமம் . அங்கே ஓரிடத்தில் 600 மீற்றர் சுற்றளவில் 04 பலசரக்குக் கடைகள் இயங்கி வருகின்றன. அவற்றுக்கு நடுவில் ஒரு இளைஞன் கடை ஒன்றை வாடகைக்குப் பெறுகின்றான். அக்கடை ஏற்கனவே வியாபாரத்தில் நட்டப்பட்டுப் பூட்டப்பட்டிருந்தது.

பலசரக்குக் கடை ஒன்றைத் திறக்கின்றான்.

இது என்னடா இது வெறும் மொக்குப் பெடியனாக இருக்கிறானே. சுற்றி வளைச்சு நாலு பக்கமும் பலசரக்குக் கடைகள் இருக்கிறது. இந்தப் பெடியனும் நடுவில் கடை போட்டு நட்டப்படப் போகின்றானே எனக் கவலைப்பட்டேன்.

ஆரம்பத்தில் இவனது கடைக்குப் பொருள்கள் வாங்க பெரிதாக ஆள்கள் வரவில்லை. நாளாக நாளாக ஆள்கள் வரத் தொடங்கினார்கள். நானும் ஒரு நாள் இண்டைக்கு ஒருக்கா உந்தப் பெடியனிடம் சாமான் வாங்கிப் பார்ப்போமென வீட்டுத் தேவைக்குப் பொருள்களை வாங்கினேன். மற்றைய கடைகளை விட விலை மலிவாகவும் பொருள்கள் தரமாகவும் இருந்தன.

தம்பி உங்கட கடைக்கு இப்ப சனம் நிறைய வரத் தொடங்கீட்டினம். ஆரம்பத்தில நானும் கவலைப்பட்டேன். சுற்றி வளைச்சு நாலு கடை இருக்க நீங்களும் ஏன் கடை போடுறியள் என.

உங்கட வியாபாரத்தின் ரகசியம் என்ன எனக் கூறுங்கள்.

தமிழர் பொருண்மிய உயர்வு குறித்து ஒரு பத்திரிகைக்கு எழுதுறனான். இதையும் எழுதுவம். நாலு பேர் நல்லா வருவினம் என்றேன்.

ஓம் அண்ணை சரியான சந்தோசமாக இருக்கு. என்ர வியாபார வெற்றியின் இரகசியம் இது தான்.

01. நான் ஏற்கனவே இதற்குப் பக்கத்து ஊரில் தான் புதிதாகக் கடை வைத்தேன். எவ்வாறு வெற்றியாகப் பலசரக்கு வியாபாரத்தைச் செய்யலாமென நாளும் பொழுதும் மூளையைக் கசக்கினேன். அதனால் வியாபாரம் சிறப்பாக நடந்தது. செய்யும் தொழிலே தெய்வமென நினைத்துச் செய்து பாருங்கள். வாழ்வில் உயர்வீர்கள். வெல்வீர்கள்.

02. பக்கத்துக் கிராமத்தில் எனது கடை முன்னணிப் பலசரக்கு வியாபாரமாக மாறி நான் நல்ல வருவாயீட்ட கடை தந்த உரிமையாளனுக்குப் பொறாமையும் பேராசையும் வந்தது. என்னை எழுப்பி விட்டுத் தான் கடை போட்டு இப்போது கந்தறுந்து நிற்கின்றார்.

அதாவது தொழில் தெரிந்து முதலிட வேண்டும். முதலீடு செய்த பின்பாகத் தொழில் தொடங்கினால் அதாவது தொழிலைப் பழகினால் இப்படித் தான் நடக்கும்.

03. எனது கடைக்கு நான் அன்றாடம் பொருள்களை அளவளவாகக் கொள்வனவு செய்வேன். அரிசி, சீனி, மா போன்றவற்றை மட்டும் 25 கிலோ உள்ள மூடையைக் கொள்வனவு செய்வேன். ஏனைய பருப்பு, பயறு, உழுந்து, கடலை, கௌபி, மல்லி போன்றவற்றை நாளாந்தம் 3 முதல் 5 கிலோ வரையில் தான் கொள்வனவு செய்வேன். இதனால் எனது கடையில் பொருள்கள் எப்போதும் புதிதாகவும் தரமாகவும் இருக்கும்.

மூடைக் கணக்கில் வாங்கினால் அவை நாளாக நாளாக தரம் குறைந்து வண்டடித்துப் போய் விடும். அவ்வாறு ஒரு நாள் ஒரு பொருள் வாங்கினால் எனது கடையின் நன்மதிப்புப் போய்விடும். அதனால் நாளாந்தம் சிறிதளவாக வாங்குவேன். ஒரு நாள் கிலோ 500 ரூபா விற்ற ஒரு பொருள் மறுநாள் கிலோ 400 ரூபாவாகக் குறையலாம்.

நான் நாளாந்தம் பொருள்களை வாங்குவதனால்எனது வாடிக்கையாளருக்கு விலையின் மலிவை உடனடியாக அனுபவிக்க வழி செய்கிறேன்.

04. மூடைக் கணக்கில் வாங்கி அடுக்கும் டம்பிங் ஸ்ரொக் வேலைக்குப் போகின்றவர்கள் பெரும்பாலும் கடனுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்பவர்களாகவே இருப்பார்கள். கடனுக்கு பொருள்களை நான் ஒரு நாளும் வாங்குவதில்லை. கைக்காசுக்கே வாங்குகின்றேன். இதனால் எனது பொருள்கள் எப்போதும் தரமாகவும் புதிதாகவும் இருக்கும்.

05. கடனுக்குப் பொருள்களை வாங்கினால் பொருள்களை விற்றோமோ இல்லையோ அந்த நாள் வரக் காசு கொடுக்க வேண்டும். வங்கி நடைமுறைக் கணக்கு வைத்திருந்தால் செக் – காசோலை மூலமாகக் காசு கொடுக்க வேண்டும். இது வியாபாரத்தைப் பாதிக்கும்

எனக்கு வங்கியில் சேமிப்புக் கணக்கு மட்டுமே உண்டு. நடைமுறைக் கணக்கு வைத்திருக்கவில்லை. நடைமுறைக் கணக்கு வைத்திருந்தால் உள்ள தொகைக்கு



மேலாக மேலதிகப் பற்று வைத்திருந்து சில சமயம் தேவையில்லாமல் அதற்குப் பெரிய தொகை வட்டி கட்ட வேண்டும்.

06. எனது கடைக்கு பொருள்களை வாங்கி விற்கும் போது சிறிய தொகை இலா பம் வைத்துப் பெரிய தொகை வருமானம் உழைக்கின்றேன். உதாரணமாகச் சொன்னால் திருநெல்வேலிச் சந்தையில் முட்டை ஒன்று 40 ரூபாவுக்கு வாங்கினால் அதனை எனது கடையில் 5 ரூபா இலாபம் வைத்து 45 ரூபாவுக்கு மட்டுமே விற்பேன். அதனால் அந்த 05 ரூபா இலாபம் பார்த்து நிறையப் பேர் வருவார்கள். ஒரு பொருள்வாங்க வந்தவர்கள் ஏனைய பொருள்களின் மலிவைப் பார்த்து பல பொருள்களை வாங்கும் போது வியாபாரம் நன்றாக ஓடும்.

ஒரு முட்டையில் 05 ரூபா இலாபம். ஏனையவர்கள் யாழ்ப்பாணம் அல்லது திருநெல்வேலியிலிருந்து எடுத்து வரும் நேரம் செலவு கருதி அல்லது கடை வாசலில் 50 ரூபாவுக்கு முட்டைகளைத் தரும் மொத்த வியாபாரியின் விலை கருதி 55 ரூபாவுக்கு விற்பார்கள்.

ஆனால் நான் 05 ரூபா இலாபம் வைத்து விற்கும் போது நாளாந்தம் சராசரியாக 200 முட்டைகள் விலைப்படும். இதனால் முட்டை விற்று மட்டும் 1000 ரூபா இலாபம் உழைப்பேன்.

07. எனது வாடிக்கையாளர் யாருக்குமே கடனுக்கு வியாபாரம் செய்வதில்லை. எல்லோருக்குமே கைக்காசுக்குத் தான் விற்பனை செய்கிறேன். கொப்பி வைத்து கடனுக்கு விற்றால் ஒரு 25 பேரிடம் தலா 10 000 ரூபாப்படி காசு வருமதியாக நிற்கிறது என வைத்துக் கொள்வோம். இரண்டரை இலட்ச ரூபா முதல் எனது வியாபாரத்தைப் பாதிக்கும்.

அவர்களிடம் காசு கேட்டுப் போக எனது வியாபாரத்தின் நிம்மதி பாதிக்கும். அதனால் கடன் வியாபாரம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

08. எனது கடைக்கு ஒருவர் வந்து ஒரு பொருளைக் கேட்கின்றார். அது என்னிடம் இல்லையெனக் கூற மாட்டேன். இருந்தது. முடிந்து விட்டது. நாளைக்கு வாருங்கள். வாங்கலாமெனக் கூறித் தந்திரமாகப் பொருளின் தன்மை போன்ற விபரங்களை அறிந்து சொற்ப அளவு வாங்கி வருவேன்.

பலசரக்குப்பொருள் எதுவாக இருந்தாலும் இல்லையெனக் கூற மாட்டேன். இருந்தது. முடிந்து விட்டது. பின்னர் வாருங்கள் எனத் தான் கூறுவேன்.

09. வாகனங்களில் பொருள்களை விற்பதற்கெனக் கொண்டு வருவோர் தவணை தரலாமென அளவுக்கு மீறிப் பொருள்களைத் தலையில் கட்டி விடப் பார்ப்பார்கள். அவர்கள் தமது விற்பனை இலக்குக்காகா கடைக்காரர்களிடம் டம்பிங் ஸ்ரொக்குகளை வைத்துக் குடிமூழ்கச் செய்வார்கள்.

அதற்கு நாம் எடுபட்டால் கடன் எம்மைத் துரத்திக் கொண்டே இருக்கும். நாளாக நாளாக வியாபாரம் அழியும்.

10. கடை ஒரு நாளும் பூட்டக் கூடாது. இன்று அங்கே கல்யாண வீடு அல்லது சாமத்திய வீடு அல்லது செத்த வீடு அல்லது அந்தரட்டி அல்லது கோயில் திருவிழா எனக் காரணம் சொல்லிப் பூட்டவே கூடாது. பூட்டினால் பக்கத்துக் கடைக்காரன் எனது வாடிக்கையாளனை குறைந்த விலையில் ஓரிரு தடவை பொருள்களை விற்றுக் காட்டி வளைத்துப் போடுவான். போன வியாபாரம் போனது தான்.

பல பலசரக்கு வியாபாரங்கள் நட்டத்தில் போன வியாபாரத் தோல்விக்குக் காரணம் இவ்வாறு கண்டபடி கடையைப் பூட்டியது தான்.

11. காலையில் 8 மணிக்குக் கடை திறப்பேன். திருநெல்வேலிச் சந்தைக்கு அதிகாலையில் சென்று அன்று புதிதாக வந்த மரக்கறிகளை, ஏனைய பொருள்களைத் தேவை கருதிக் கொள்வனவு செய்து வருவேன்.

மதிய வேளையில் ஒரு மணி முதல் மூன்றரை மணி வரையில் மட்டும் கடை பூட்டுவேன். இது ஒருவிதமான தூக்க நேரம். அப்போது ஓய்வெடுத்துக் கொள்வேன்.

இரவு 09 மணி வரையில் கடை திறந்து வியாபாரம் செய்வேன். பலர் இரவு 08 மணியளவில் பூட்டி விடுவார்கள்.

கூலி வேலைக்குத் தூர இடத்துக்குச் சென்ற ஒருவர் அல்லது கடைகளில் வேலை செய்பவர்கள் இரவு 08 மணி தாண்டியே வீட்டிற்கு வருவார்கள். அதனால் 09 மணி வரையில் திறந்தால் அவர்கள் மூலமான வியாபாரம் நடக்கும். எனது கடையை நம்பி வருவார்கள்.

என்ன தான் கஸ்ர மென்றாலும் நானோ எனது மனைவியோ கடையைத் திறந்து நடத்துவோம்.

12. எனது கடையில் பாண், பணிஸ் வகைகளை நான் விற்பதில்லை. காரணம் பேக்கரி வாகனத்திற்காகவும் காலை உணவுப் பொருளான பாணை விற்பதற்காகவும் நான் அதிகாலையில் கடை திறக்க வேண்டும். பாணில் வரும் சொற்ப இலாபத்துக்காக நான் ஏனைய பொருள்கள் அனைத்துக்குமான கொள்வனவை இழக்க வேண்டிவரும்.

அல்லது கொள்வனவுக்காக இன்னொருவரை அனுப்ப வேண்டி வரும். அது சரிப்பட்டு வராது.

13. எனது கடையில் சம்பளத்திற்கு ஆள் வைத்திருப்பதில்லை. எனதும் மனைவியினதும் முழு உழைப்பிலும் தான் கடை நடத்துகின்றோம்.

லெவலுக்கு ஒரு ஆளை வைத்திருந்து கூலிக்கு உழைக்க முடியாமல் நட்டப்பட்டோர் பலர்.

14. வேலை வெட்டி இல்லாதோர் எனது கடை வாசலில் கூடிக் கதைக்க இடம் வைப்பதில்லை. அது தேவையற்ற சோலிகளை உருவாக்கும் கண்ணியமான வாடிக்கையாளரைப் பாதிக்கும்.

**அன்பான வாசகர்களே,**

**பலசரக்குக் கடை ஒன்றை வெற்றிகரமாக நடத்த என்ன செய்ய வேண்டுமென ஒரு வியாபாரியின் அனுபவப் பட்டறிவைத் தந்துள்ளேன்.**

**நாடெங்கும் ஊரெங்கும் வெற்றிகரமாகத்தொடங்கவல்ல ஒரு வியாபாரம். மிகவும் மனக் கட்டுப்பாட்டுடன் செய்து பாருங்கள். உங்களது பொருண்மியமும் உயரும். தாயகப் பொருண்மியமும் தலை நிமிரும்!**

**மின்மடல்** : tamilseconomy@gmail.com
**தொலைபேசி** : 0777304010 / 0702675575

# பொருளாதாரமும் வாக்குறுதிகளும்!

ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகள் தீவிர மடைந்திருக்கும் நிலையில் பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களும் வெளியிடப்பட்டுள்ளன. கடந்த காலங்களைவிட இம்முறை ஜனாதிபதித் தேர்தல் பல்வேறு விடயங்களில் வித்தியாசமானதாக உள்ளது. முதல் தடவையாக அதிகமான வேட்பாளர்கள் களமிறங்கியிருக்கின்றார்கள். தேர்தலின் முடிவுகள் எவ்வாறாக அமையும் என்பதும் ஊகிக்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. முதல் தடவையாக தமிழ்க்கட்சிகள், பொது அமைப்புக்களின் ஆதரவுடன் தமிழ் வேட்பாளர் ஒருவர் பொது வேட்பாளராக களமிறங்கியிருக்கின்றார். இது போன்ற காரணங்களால், மக்கள் என்ன முடிவை எடுக்கப்போகின்றார்கள் என்ற ஆர்வம் அதிகரித்துள்ளது.

இவற்றுக்கு மேலாக இம்முறை தேர்தல் பரப்புரைகளின் போதும், தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் பொருளாதாரம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டில் உருவாகிய பொருளாதாரப் பிரச்சினை, வரலாற்றில் என்றும் இல்லாத மக்கள் கிளர்ச்சி ஒன்றுக்கும், அதிகார மாற்றத்துக்கும் காரணமாகியது. அதனால், நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு நிர்வகிக்கப்போகின்றோம் என்பதைச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் அனைத்துக் கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. தேர்தல் வாக்குறுதிகள் என்பவை பொதுவாகவே மக்களைக் கவர்வதற்காகச் சொல்லப்படுபவைதான். அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அக்கறைகாட்டுவதில்லை என்பது வரலாறு!

பொருளாதாரம் குறித்த தேர்தல் வாக்குறுதிகளில் மூன்று விடயங்கள் பிரதான இடத்தைப் பெறுகின்றன. முதலாவது, சர்வதேச நாணய நிதியத்துடனான உறவு குறித்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுவது தவிர்க்க முடியாத ஒன்று. வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தை மீட்டெடுத்ததில் ஐ.எம்.எப். முக்கியமான பங்களிப்பை வழங்கியுள்ளது. அது தொட வேண்டும் என்பதுதான் அவரது நிலைப்பாடு. அதனைத் தொடர்வதற்கு தான் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்பது அவரது பரப்புரைகளில் பிரதான இடத்தைப் பெறுகின்றது. இல்லையெனில் மீண்டும் வரிசை யுகத்துக்குச் செல்ல வேண்டியிருக்கும் என்ற எச்சரிக்கையையும் அவர் முன்வைக்கிறார்.

சஜித் பிரேமதாசவைப் பொறுத்தவரையில் நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கின்றார். அநுரகுமார திசாநாயக்க அந்த உடன்படிக்கைக்கு எதிரான நிலைப்பாட்டைக்கொண்டுள்ளார். அரகலய போராட்டத்தை நடத்திய குழுவினரும் நாணய நிதியத்துக்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டுள்ளார்கள். ஆக, நாணய நிதியத்துடனான உடன்படிக்கை அவசியமா, திருத்தப்பட வேண்டுமா, அல்லது, கிழித் தெறியப்பட வேண்டுமா என்பதில் பிரதான கட்சிகளிடையே கூட உடன்பாடு இல்லை. போட்டியாளரின் நிலைப்பாட்டை எதிர்ப்பதும், மக்களைக் கவரக்கூடிய விதமாக எதனையாவது சொல்வதும்தான் இவர்களுடைய பொருளாதாரக் கொள்கைக்கு அடிப்படையா?

# நெல் கொள்வனவிற்காக சலுகைக்கடன்

**கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், 2024 ஆம் ஆண்டு நெல் கொள்முதல் செய்வதற்கான சலுகை வட்டி விகிதத்தின் கீழ் வங்கிகள் மூலம் கடன் திட்டத்தை செயல்படுத்த 08-01-2024 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப் பட்டது.**

பூரணி

சிறுபோக நெல் கொள்வனவிற்காக சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்கப்படவுள்ளது என்பது விவசாயிகளுக்கும் சம்பந்தப்பட்டோருக்கும் மகிழ்ச்சியான செய்தி தான்.

ஆனாலும் நெல்லை கொள்வனவு செய்யும் இவர்கள் விவசாயிகளிடமிருந்து தீர்மானம் ஆக்கப்பட்ட விலைக்கே கொள்வனவு செய்கிறார்களா என்பது கேள்விக்குரிய ஒரு விடயமாகவே காணப்படுகின்றது.



வயலோடும் வாழ்க்கையோடும் போராடிக் கொண்டிருக்கும் எங்களிடம் இருந்து நியாயமான விலையில்நெல்லை கொள்வனவு செய்வதோடு , தொடர்ச்சியாக நெல்லை சேமித்து வைத்துஅவற்றை சரியான விலையில் விற்பதற்கான நெறிப்படுத்தல்களையும் நாங்கள் அரசிடம் இருந்து எதிர்பார்க்கிறோம்.தற்போது சிறிய அளவிலேனும் சில நெல் சேமிப்பு நிலையங்களை அரசு உருவாக்கிக் கொடுத்திருக்கிறது காலப்போக்கில் விவசாயிகளுக்கானநல்லதிட்டங்களை அரசுகொண்டுவரும் என்று எதிர்பார்க்கிறோம் என்கின்றனர் விவசாயிகள்.

2024 சிறுபோகத்திற்கான நெல் கொள்வனவிற்காக சலுகை வட்டி வீதத்தில் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 6000 மில்லியன் ரூபா வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படவுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள், நெல் களஞ்சிய உரிமையாளர்கள், மொத்த நெல் கொள்வனவாளர்களுக்கு இந்த கடன் வழங்கப்படவுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான நெல் கொள்வனவுக்கான மானிய வட்டி வீதத்தில் வங்கிகள் ஊடாக கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், 2024 ஆம் ஆண்டு நெல் கொள்முதல் செய்வதற்கான சலுகை வட்டி விகிதத்தின் கீழ் வங்கிகள் மூலம் கடன் திட்டத்தை செயல்படுத்த 08-01-2024 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப் பட்டது.

இதன்படி, பெரும்போகம் மற்றும் சிறுபோக நெற் கொள்வனவுக்காக ஏனைய அமைச்சுகள் மற்றும் அரச மற்றும் தனியார் வங்கிகளின் பிரதிநிதிகளுடன் திறைசேரியின் பிரதி செயலாளர் தலைமையில் குறித்த கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சலுகை வட்டியில் கடன் பெறவுள்ள தரப்பினர்: கிடைத்தது அமைச்சரவை அங்கீகாரம்; Loans Subsidized Interest Rates For Paddy Purchase

மேற்படி கலந்துரையாடலில் எட்டப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள், நெல் களஞ்சிய சாலை உரிமையாளர்கள் மற்றும் மொத்த நெல் கொள்வனவாளர்கள் பங்குபற்றும் வங்கி நிறுவனங்கள் ஊடாக 6,000 மில்லியன் ரூபா கடனை சலுகை வட்டியில் வழங்குவதற்கு நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,94,800 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,12,450 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 180/= |
| உருளைக்கிழங்கு | 220/= |
| பச்சை மிளகாய் | 250/= |
| தக்காளி | 300/= |
| மரவள்ளிக்கிழங்கு | 200/= |
| கோவா | 320/= |
| கரட் | 380/= |
| வாழைக்காய் | 300/= |
| சின்ன வெங்காயம் | 250/= |
| பாகற்காய் | 300/= |
| வெண்டிக்காய் | 100/= |
| பயற்றங்காய் | 300/= |
| பீற்றூட் | 300/= |
| முருங்கைக்காய் | 180/= |
| தேங்காய் | 130/= |




**கேள்வி -** சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பாக தேர்தல் பிரசாரங்களின் போது முக்கியமாகப் பேசப்படுகின்றது. அரகலய குழுவினர் இந்த உடன்படிக்கை கிழித்தெறியப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கின்றார்கள். அது சாத்தியமா?

**நந்தினி மகேஸ்வரன்,**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**பதில் -** அரகலய குழுவினர் மக்கள் போராட்ட முன்னணி என்ற பெயரில் கட்சி ஒன்றை அமைத்து இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். அந்தப் போராட்டத்தில் முன்னணியில் நின்ற நுவான் போபகே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார். அண்மையில் நேர்காணல் ஒன்றில் அவர் தெரிவித்த கருத்துக்களையிட்டுத்தான் உங்கள் கேள்வி அமைந்திருக்கின்றது என்று நினைக்கின்றேன்.

"சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தை மீளாய்வு செய்வதாக நாங்கள் குறிப்பிடவில்லை. முழுமையாக விலகுவோம். நாட்டின் பிரச்சினைக்கு நாணய நிதியம் ஒரு தீர்வாக அமையாது, வட்டி முதலாளியாகவே செயற்படுகிறது. நாட்டு மக்களின் வரியை கொள்ளையடித்து தம்மை வளப்படுத்திக் கொள்ளும் விதமாகச் செயற்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தில் இருந்து விலகுவதற்கான ஆணையையே கோருகிறோம். நாட்டு மக்கள் இன்று நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் பொறுப்புக் கூற வேண்டும். நாணய நிதியத்தினால் மீட்சிப் பெற்றுள்ளோம் என்று குறிப்பிடுவது மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயற்பாடு"

இதுதான் அவர் கூறியிருந்தது. அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்களில் சில உண்மைகளும் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். வட்டி முதலாளியாகச செயற்படுகின்றது போன்ற கருத்துக்களில் ஓரளவு உண்மை உள்ளது. அதேவேளையில் மறுபுறத்தில் - வரிகள் தொடர்பாகவும் போபகே குறிப்பிட்டிருந்தார்.

வரிகள் என்பது அரசர்கள் காலத்தில் இருந்தே நடைமுறையில் இருக்கும் ஒரு வழமை. அரசாங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்க அது தவிர்க்க முடியாதது. அதனால்தான் சில வரிகளை அதிகரிக்குமாறு நாணய நிதியம் அழுத்தம் கொடுக்கின்றது. அதேவேளையில், அவ்வாறு அதிகரிக்கும் போது நடுத்தர மற்றும் கீழ் மட்டத்தில் உள்ள மக்கள் பாதிக்கப்படாமலிருப்பதையும் உறுதிப்படுத்த அரசாங்கம் தவறுவதுதான் பிரச்சினை.

சர்வதேச நாணய நிதியத்திலிருந்து ஒரேயடியாக விலகினால், பொருளாதாரத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்பது முக்கியமான கேள்வி! இது தொடர்பாகப் பேசுபவர்களிடம் அதற்கான பதிலும் இருப்பதில்லை. முறையான நீண்ட கால அடிப்படையிலான பொருளாதாரக் கொள்கை ஒன்றை அரசு பின்பற்றினால், ஐ.எம்.எப். குறித்த சர்ச்சைக்கு இடமிருக்காது.

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 199/= |
| கனடா டொலர் - | 218/= |
| சீன யுவான் - | 41/= |
| யுரோ - | 328/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 225/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 348/= |
| அமெரிக்க டொலர் - | 296/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 209/= |
| கனடா டொலர் - | 228/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 343/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர் டொலர் | 236/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 406/= |
| சுவிஸ் பிராங் - | 364/= |
| அமெரிக்க டொலர் - | 305/= |

இண்டைக்கு நாங்கள் ஆச்சி அப்புவின்ரை எத்தினையோ பழக்கவழக்கங்களை நாகரிகம் எண்ட பெயரிலை மறந்து போனம். அப்பிடி மறந்து போன விசயங்களில ஒண்டுதான் உந்த பாக்கு இல்லாட்டில் வெத்திலை உரலும் அதில இருந்து வாற அந்த டொக்கு...டொக்கு...சத்தமும்.



# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

வெத்திலை போடுறது நல்லம் எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லுறவ. அதில கன விசேசங்கள் இருக்கெண்டுவா. ஒரு மனுசனுக்கு வாதம், பித்தம், கபம் இந்த மூண்டும் ஒழுங்கா இருந்தா ஒரு கோதாரியும் ஒருத்தருக்கும் வராது எண்டுவா. பாக்கு பித்தத்தையும் சுண்ணாம்பு வாதத்தையும் வெத்திலை கபத்தையும் கட்டுப்படுத்தும் எண்டுவா.

அதிலும் வெத்திலை முட்டு நெஞ்சுச் சளி சுவாசப்பை நோயளுக்கு கைகண்ட மருந்து எண்டுவா. அதாலதான் முந்தி எங்கட ஆக்கள் சாப்பிட்ட பிறகு ஒரு வாய் வெத்திலை போடுறதை வழக்கமா வைச்சிருந்தவை.

ஆனா எதுகும் அளவோட இருக்கவேணும் எண்டு அப்பு சொல்லுறவர். ஆடுமாடுஇலை குழை தின்னுறமாதிரி அதேவேலையா இருந்து வெத்திலை பாக்குச் சுண்ணாம்பு திண்டாப் பேந்து கான்சர் வந்து கண்ணை மூடவேணும் எண்டுவார்.

உப்பிடி அளவுக்கு மிஞ்சி வெத்திலை திண்ட எத்தினையோபேர் வாழ வயது இருந்தும் கான்சர் வந்து செத்தவை. முந்தி நல்லநாள் பெருநாள் எண்டில்லை வீடுவழியை ஆர் வந்தாலும் வெத்திலை குடுக்கிற ஒரு பழக்கம் இருந்தது.

அதுக்காகவே வீடுகளிலை விறாந்தையில இருக்கிற வாங்கில வெத்திலைப் பெட்டியோ இல்லாட்டில் வெத்திலைத்தட்டமோ இருக்கும்.

ஆரும் போற இடத்தில வெத்திலைப்பெட்டியை இல்லாட்டில் தட்டத்தை நீட்டாட்டி ஆக்கள் கோவிக்கிற நிலைமையும் இருந்தது.

அதுகும் வீட்டை வேலைக்கு வாற ஆக்களுக்கு கோப்பி தேத்தண்ணி



சாப்பாட்டோட வெத்திலை போயிலையும் கட்டாயம் குடுக்க வேணும். எங்கட அப்பு ஆச்சி எப்பவும் சாப்பிட்ட உடனை வெத்திலை போடுவினம்.

அதிலும் இரவில படுக்கப்போக முந்தி கட்டாயம் வெத்திலை போடுவினம். அவையின்ரை அந்நியோன்னத்துக்கு உந்த வெத்திலைபாக்கும்ஒருகாரணமாய் இருக்க வேணும். அதிலும் ஆச்சி தலைவாசல் விறாந்தையில ஒரு காலை மடிச்சு வைச்சு மற்றக்காலை நீட்டி வைச்சு உரலுக்கை வெத்திலையையும் பாக்கையும்போட்டு டொக்கு டொக்கெண்டு இரும்பு உலக்கைத்துண்டால இடிக்கிற திலை ஒரு ரிதம் இருக்கும்.

அதுகும் அவ அந்த உரலை இடது கையால மெல்லமாச்சுத்திச் சுத்தி வலது கையால இடிக்கிறதைப் பாக்க ஆசையா இருக்கும். இப்பிடி இடிச்ச பிறகு ஆச்சி இடிச்ச பாக்கு வெத்திலையை உள்ளங்கையில கொட்டிப் பேந்து ரெண்டாப் பிரிச்சு ஒரு பங்கை அப்புவுக்குக் குடுத்துப்போட்டு மற்றப்பங்கை தான் வாயிலை போட்டுக் குதப்புவா.

அப்புவும் ஆச்சியும் வெத்திலையைக் குதப்பிப் போட்டுத் துப்பிறதிலையும் ஒரு டிசிப்பிளின் இருக்கும். அதுகும் அப்பு வாயிலை ரெண்டு விரலைவைச்சுத் துப்பினார் எண்டால் வெத்திலைத்துப்பல் மூண்டடி தள்ளிப்போய் வேலி மட்டக்காலுக்கை விழும். பேந்து போய்க் காலால புழுதியைத் துப்பலுக்கு மேல சிலாவிப்போட்டு வருவார்.

உந்த எல்லாத்திலையும் பாதிபாதியா இருக்கிற பண்புதான் பங்கிடுகிற பண்புதான் அப்பு ஆச்சி ரெண்டு பேரையும் சுகம் துக்கம் ரெண்டையும் பங்கு போட்டுக் குடும்பம் நடத்திற பழக்கத்தைக்குடுத்து அந்நியோன்னியமா இருக்க வைச்சுது. ஆச்சி தனிய அப்புவுக்கு எண்டில்லை இடைக்கிடை எங்களுக்கும் தன்னட்டை கதைக்க வாற பெண்டுகளுக்கும் கூட உந்த வெத்திலையை இடிச்சுத் தந்திருக்கிறா. உதால அயலட்டையுக்கையும் ஒரு பந்தம்,பாசம், நெருக்கம் இருந்தது.

இண்டைக்கு நாங்கள் ஆச்சி அப்புவின்ரை எத்தினையோ பழக்க வழக்கங்களை நாகரிகம் எண்ட பெயரிலை மறந்து போனம். அப்பிடி மறந்து போன விசயங்களில ஒண்டு தான் உந்த பாக்கு இல்லாட்டில் வெத்திலை உரலும் அதில இருந்து வாற அந்த டொக்கு...டொக்கு...சத்தமும்.

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1.வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.

2.சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.

3.கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.

4.ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.

5.நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1.பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

2.இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.

3.அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.

4.திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

5.கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**விவசாயத்தையும் அதே வகையில் அபிவிருத்தி செய்ய என்ன செய்யலாம் என திட்டமிட்டனர். விவசாயத்திற்கு வளமான நிலமும் நிலத்துக்கு பாய்ச்ச நீரும் அவசியம் தானே அதை தேடி கண்டு கொள்ள நமது காடுகளுக்குள் பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் இறங்கினர். திரு பார்க்கர் என்பார் காடுகளில் இறங்கி பார்த்தபின் ஒரு அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தார்**

# குளங்களை மையப்படுத்திய சிங்கள குடியேற்ற திட்டங்கள்

## பார்வை 4



தமிழ்க்கவி



விவசாயம் மட்டுமே மக்களை காப்பாற்றுவது அதாவது உணவளிப்பது. ஏனைய தேவைகளை நிறை வேற்றுவது போல கச்சாப் பொருட்களை வைத்துக் கொண்டு உணவை தயாரிக்க முடியாது. கோதுமையோ அல்லது ஓட்சாவானாலும் நெல்லானாலும் மண்ணில் விதைத்தே பெற முடியும். அதை அயல் நாடுகளிலிருந்து பெறுவதானாலும் அவர்களும் மண்ணிலிருந்துதான் அவற்றைப் பெறுகிறார்கள்.

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் நமது மண்ணின் உணவு உற்பத்தியை நசுக்கினாலும் இங்குள்ள அனைத்து மக்களுக்கும் இறக்குமதி செய்து உணவளிப்பது பெரு நட்டம் என ஆங்கிலேய ஆட்சி உணர்ந்தது. அவர்கள்தான் இன்னொன்றையும் கண்டார்கள். அவர்களது அலுவலக வேலைகளுக்காக தமது தேசத்திலிருந்து ஊழியர்களை கொண்டு வந்து அதிக சம்பளத்தை வழங்குவதைவிட இங்குள்ள ஆர்வமுள்ள மாணவர்களுக்கு தமது மொழியை கற்பித்து அவர்களை அலுவலக வேலைகளில் நியமித்தால் செலவு பாதியாக குறையும் என்பதையும். ஆக பாடசாலைகளில் ஆங்கில மொழிமூல கற்பித்தல் வெகு வேகமாக முன்னெடுக்கப்பட்டது. கல்வி இலவசமில்லை. பணமுள்ளவர்களே அதில் ஆர்வம் செலுத்தினர்.

விவசாயத்தையும் அதே வகையில் அபிவிருத்தி செய்ய என்ன செய்யலாம் என திட்டமிட்டனர். விவசாயத்திற்கு வளமான நிலமும் நிலத்துக்கு பாய்ச்ச நீரும் அவசியம் தானே அதை தேடி கண்டு கொள்ள நமது காடுகளுக்குள் பிரித்தானிய ஆராய்ச்சியாளர்கள் இறங்கினர். திரு பார்க்கர் என்பார் காடுகளில் இறங்கி பார்த்தபின் ஒரு அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தார். அதுபற்றி நாம் முன்னைய கட்டுரையில் பார்த்தோம்.

1807ம் ஆண்டு கப்டன் செனிட்டர் என்பவர் குளங்கள் பற்றிய அறிக்கையை சமர்ப்பித்தார். குளங்கள் ஏன் உடைப்பெடுக்கின்றன என்பதும் அதன்கீழ் தொடந்து விவசாயம் செய்ய என்ன வழிமுறைகளை கையாளலாம் எனவும், அவர் அறிக்கையிட்டார். குளங்கள் பெரும்பாலும் இயற்கை அரண்களை பெற்றுள்ளமை காணப்படுகிறது. என்றாலும் மனிதர்களின் தலையீட்டால் அவை பெரிதும் பாதிப்படைகின்றன. அப்படி இயற்கை அரணைப் பெற்ற ஒரு பெரும் குடியேற்றத் திட்டமான பாவற்குளம் எமது பார்வையில் வருகிறது. பாவற்குளம் எப்படி உருவானது என்பதற்கோ அதை யார் கட்டினார்கள் என்பதற்கோ விபரம் இல்லை

இயற்கையாகவே குன்றுகளாலும் பெரும் பாறைகளாலும் அமைந்திருக்கும் நடுப்பகுதி இந்த மலைத்தொடர் தந்திரி மலை நோக்கி செல்வதாக தெரிகிறது. நடுக்குளத்தில் கலிங்கல் அமைந்திருக்கும் பகுதியில் ஒருபோதும் மண் உடையா வண்ணம் பெரிய பாறையொனறு பல மீட்டர் தொலைவுக்கு படுத்திருக்கிறது. கலிங்கல் பாயும் வாய்க்காலும் அதன் சூழலும் பாறைத் தொடர்களுடன் இருப்பதால் மண்ணரிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை.

மேலும் குளக்கட்டில் இரண்டொரு பனை மரங்களும் ஒரு பிள்ளையார் கோவிலும் இருக்கின்றன. குளக்கட்டு



வவுனியாவிலிருந்து, இரண்டாவது மைலில் நெளுக்குளத்திலிருந்து தெற்கு நோக்கிப்பிரியும்செட்டிகுளம்பிரதான வீதியின் நாலாவது மைலில் வீதியின் அருகாக இருக்கிறது. குளக்கட்டின்கீழ்அடர்வனத்தின் தொடரும் இடைவெளிகளூடே விரியும் வயல்களின் பச்சைப்பசேலென்ற அழகும் மனதைக் கொள்ளை கொள்ளும். இந்தக்குளம் காட்டிடையே கவனிப்பின்றி இருந்த காலம் இருந்தது.

எனினும், அதன்கீழ்இலட்சக்கணக்கான ஏக்கர் நிலத்திற்குரிய பாசனம் செய்யலாம் என்பதையும் கண்டு அதன் அபிவிருத்திக்காக திட்டமிட்டு அதனை புனரமைத்தது பிரித்தானியர்தான். ஆனால், வேலை முடிவதற்குள் நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது. எனவே கொத்தலாவலை அவர்களின் குடியேற்றத்திட்டம் இங்கே ஆரம்பிக்க முடிவாயிற்று.

ஏற்கெனவே வாரிக்குட்டியூர் என்ற கிராமம் இங்கே சில சிங்கள மக்களுடன் இருந்தது. இவர்களுடைய போக்குவரவுக்காக ஒரு தட்டிவான் ஓடியது. அது அந்த சிங்கள இனத்தவருடையதுதான். அப்போது அரசியல் போட்டிகளை மக்களுக்குத் தெரியாது. மனிதாபிமானத்துடன் அவர்கள் கலந்து வாழ்ந்தார்கள். பாவற்குளம் காணியில் வேலை செய்ய வரும் தமிழர்கள் நேரமாகிவிட்டால் வீடு திரும்ப முடியாது. காரணம் யானைகள்.

எனவே அந்த பெரியமனிதர் அவர்களை தன்வீட்டில் தங்கவைத்து காலையில் பூவரசன்குளத்தில் கொண்டுவந்து விடுவார். இதை வைத்தே மேலும் சிங்களவர்களை குடியேற்ற கொத்தலதவலை எடுத்தமுடிவை பாராளுமன்றத்தில் அடங்காத்தமிழன் சீ சுந்தரலிங்கம் எதிர்த்தார். (இதே இடத்தில் பல வருடங்கள் கழித்து ஒரு பாரிய விகாரையை கட்டி புதிய வீடுகளையும் கட்டி ‘ரன்கெத்கம’ என்ற பெயரில் பிரேமதாஸ ஒரு குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்தார். அடுத்து நடந்த பெரும் போரில் அது காணாமல் போயிற்று மீண்டும் இப்போது மக்கள் அங்கு வசிக்கிறார்கள் அதே பழைய நட்போடு.)

ஏனைய தமிழர்களும் அதனை எதிர்த்து நின்றதால் அனைத்து மக்களுக்கும் பகிர்வதாக ஒரு போக்குக் காட்டி குளத்தின் அருகே உள்ள இடம் வைத்தியசாலை பாடசாலை விகாரை அரச சேவைகள் என அனைத்தையும் உள்ளடக்கி இன்னுமொரு பாரிய குளப்பாசனத்தையும்சேர்த்து குளத்தின் அருகே பாவற்குளம் முதலாம் இரண்டாம் யூனிட்டுகள் பகிரப்பட்டது. தனியே சிங்கள மக்களுக்கு. மூன்றாவது யூனிட் முஸ்லீம் மக்களுக்கு வழங்கப்பட்டது.

அடுத்து ஒரு பாடசாலை கூட்டுறவுக்கடை ஆரம்ப சுகாதார நிலையம் என கொண்ட நான்காம் யூனிட் ஐந்தாம யூனிட் இரண்டும் நிலமற்ற தமிழர்களுக்கு வழங்கப்பட்டது. கட்டிய வீடுகள். ஊர் நடுவே பொதுக் கிணறுகள் என வசதியாக இருந்தது. குடியிருக்கும், வளவை வயலை அவர்களே சுத்தம் செய்தனர். வசதியுள்ளவர்கள் கிணறு தோண்டிக்கொள்ள வசதியற்றவர்கள் மாரிகாலத்தில் மட்டும் வயலில் நெல் விதைத்தனர். தோட்டத்தில் உழுந்து பயறு போன்றவற்றையும் விதைத்தனர். ஆனால் பாவற்குளம் முதலாம் யூனிட் மக்களுக்கு இருந்தது போல போக்குவரத்து வசதியோ கடைகளோ உயர் வகுப்புகளுடனான பாடசாலையோ வரவில்லை. காலப்போக்கில் அவை தானாக அமைய வெகுநாட்களாயிற்று.

பாவற்குளத்தில் அலைகரையை அண்டியதாக புதிய வாய்க்கால் போடப்பட்டு எல்பீகொலனி என ஒரு பிரிவும் உருவானது. ஒன்றிரண்டு எனத் தொடங்கி இப்போது பத்துக்கு மேல் வளர்ந்துள்ளது.

பாவற்குளம் ஒலுக்குளம் நீர்ப்பாசனம் பூமடு வாரிக்குட்டியூர் கடந்து மணியங்குளம் கல்லாற்றுப்படுகை நிலம் ஏன இலட்சக்கணக்கான நிலங்களை நனைத்து பல சிறு குளங்களையும் நிரப்பி வருகிறது. ஒரு போதும் வற்றாத இந்தக்குளத்திற்கு ஈரற்பெரியகுளம், மதவுவைத்தகுளம் போன்ற பாரிய குளங்களின் நீர் வந்து கொண்டிருக்கின்றது.

பாவற்குளம் குடியேற்றத்திட்டத்தில் அமைந்துள்ள கிராமங்களுக்கு செல்வதற்கு மன்னார் வீதியிலிருந்து பூவரசன்குளம், தாலிக்குளம், சாளம்பைக்குளம், செக்கடிப் பிலவு போன்ற இடங்களில் பிரதான வீதியிலிருந்து தெற்கு நோக்கிப்பிரியும் வீதிகளை நாடலாம், எனினும் குளத்தை தரிசிக்க வேண்டுமானால் நெளுக்குளத்திலிருந்து பிரியும் செட்டிகுள பாதையைத்தான் பிடித்தாக வேண்டும். இப்போது அதன் விஸ்தீரணத்தை பாருங்கள். வடக்கே நெளுக்குளம் தொடங்கி குருக்கள் புதுக்குளம் வரை. தெற்கே கல்லாறு வரை



தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
01.09.2024

# இலங்கைப் பொருளாதாரத்திற்கு கைகொடுக்கும் நல்லூர் திருவிழா

## பகுதி - 02



நல்லூர் திருவிழாவின் போது வேலை வாய்ப்புகள் எவ்வாறு உருவாகின்றன என்பதைப் பார்ப்போம்:

**தற்காலிக வேலைகள்:**

விற்பனை: விழா காலத்தில், உணவு, பானங்கள், பொம்மைகள், ஆடைகள் போன்றவற்றை விற்பனை செய்ய பலர் தற்காலிகமாக வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

பாதுகாப்பு: விழா நடைபெறும் இடத்தில் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள பாதுகாப்பு காவலர்கள் தேவைப்படுவார்கள்.

சுத்தம் செய்யும் பணியாளர்கள்: விழா முடிந்த பிறகு சுத்தம் செய்யும் பணியாளர்கள் தேவைப்படுவார்கள்.

போக்குவரத்து: விழா நடைபெறும் இடத்திற்கு மக்களை கொண்டு சென்று விடுவதற்கு போக்குவரத்து வாகனங்களில் பணிபுரியும் நபர்கள் தேவைப்படுவார்கள்.

கலைஞர்கள்: விழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். இதற்கு நடனக் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள் போன் றோர் தேவைப்படுவார்கள்.

**தொடர்புடைய தொழில்கள்:**

விடுதிகள் மற்றும் உணவகங்கள்: விழா காலத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதால், விடுதிகள் மற்றும் உணவகங்களில் கூடுதல் பணியாளர்கள் தேவைப்படுவார்கள்.

கைவினைப் பொருட்கள் தயாரிப்பாளர்கள்: விழாவில் விற்பனை செய்ய கைவினைப் பொருட்களை தயாரிப்பவர்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

போட்டோகிராபர் மற்றும் வீடியோகிராபர்: விழாவின் போது புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை எடுப்பதற்கு போட்டோகிராபர் மற்றும் வீடியோகிராபர் தேவைப்படுவார்கள்.



**நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள்:**

விழா ஏற்பாடு: விழாவை ஏற்பாடு செய்வதற்கு பலர் பணிபுரிவார்கள். இது நேரடியாக வேலைவாய்ப்பை உருவாக்குகிறது.

உள்கட்டமைப்பு வசதிகள்: விழாவை நடத்த தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு பலர் பணிபுரிவார்கள். இது மறைமுகமாக வேலைவாய்ப்பை உருவாக்குகிறது.

**நல்லூர் திருவிழாவில் வேலைவாய்ப்புகள் ஏற்படுவதால் கிடைக்கும் நன்மைகள்:**

உள்ளூர் பொருளாதாரம் மேம்பாடு: விழாவின் போது உள்ளூர் பொருளா தாரம் மேம்படுகிறது.

திறன் மேம்பாடு: விழாவில் பணி புரியும் மக்கள் பல்வேறு திறன்களை கற்றுக்கொள்கிறார்கள்.

சமூக உறவுகள் வலுவடைகின்றன: விழாவில் பணிபுரியும் மக்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து பணிபுரிவதால், சமூக உறவுகள் வலுவடைகின்றன.

உட்கட்டமைப்பு மேம்பாடு - திருவிழாவின் போது பெருமளவிலான பார்வையாளர்களின் வருகைக்கு இடமளிக்கும் வகையில்நல்லூர்பகுதியிலும்அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் தொடர்ச்சியான உட்கட்டமைப்பு மேம்பாடு தேவை ஏற்படுகின்றது. திருவிழாவில் பங்கேற்பவர்களுக்கு ஒரு மென்மையான மற்றும் மகிழ்ச்சியான அனுபவத்தை உறுதி செய்ய மேம்படுத்தப்பட்ட சாலைகள், வாகனத் தரிப்பிட வசதிகள், துப்பரவு அமைப்புகள் மற்றும் பிற வசதிகள் போன்றன அவசியமாகின்றன. இப்பகுதியின் ஒட்டுமொத்த உட்கட்டமைப்பை மேம்படுத்துவதில் அரசாங்கமும் உள்ளூர் அதிகாரிகளும் முதலீடு செய்வதால் இந்த விழா உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஊக்கியாக செயல்படுகிறது. இந்த முதலீடுகள் திருவிழாவிற்கு பயனளிப்பது மட்டுமல்லாமல், உள்ளூர் சமூகம் மற்றும் எதிர்கால சுற்றுலா வாய்ப்புகளுக்கு நீண்டகால நேர்மறையான தாக்கங்களையும் கொண்டுள்ளது.

கலாச்சாரப் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு -யாழ் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இலங்கையின் செழுமையான கலாச்சார, பாரம்பரியத்தை, பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தத் திருவிழா பாரம்பரிய இசை, நடனம் மற்றும் தலைமுறை தலைமுறையாக கடந்து வந்த சடங்குகளை காட்சிப்படுத்துகிறது.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்



பலதரப்பட்ட பார்வையாளர்களை ஈர்ப்பதன் மூலம் இவ்விழா இலங்கை கலாச்சாரத்திற்கான விழிப்புணர்வையும்பாராட்டுதலையும்கலாச்சார பரிமாற்றம் மற்றும் புரிதலையும் வளர்க்கிறது. இந்தக் கலாச்சார ஊக்குவிப்பு கலாச்சார சுற்றுலா வளர்ச்சிக்கு பங்களிப்பதோடு நாட்டின் தனித்துவமான பாரம்பரியத்தை அனுபவிப்பதில் ஆர்வமுள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. இதன் விளைவாக இலங்கையில் கலாச்சார பாதுகாப்பு மற்றும் கலாச்சார சுற்றுலாவின் நிலையான வளர்ச்சிக்கு இந்தத் திருவிழா ஒரு ஊக்கியாக செயல்படுகிறது.

வருவாய் உருவாக்கம் - யாழ் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழாவின் பொருளாதார நன்மைகள் சுற்றுலா மற்றும் உள்ளூர் வர்த்தகத்தின் உடனடி தாக்கத்திற்கு அப்பாற்பட்டது. இந்தத் திருவிழா பல்வேறு வழிகளில் அரசாங்கத்திற்கு கணிசமான வருவாயை ஈட்டுகிறது.

முதலாவதாக, திருவிழாவின் போது அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகை சுற்றுலா தொடர்பான வரிகள் மற்றும் கட்டணங்கள் மூலம் அரசாங்க வருவாயை அதிகரிக்க வழிவகுக்கிறது. ஹோட்டல் வரிகள், போக்குவரத்து வரிகள் மற்றும் பாரம்பரிய தளங்கள் மற்றும் இடங்களுக்கு நுழைவுக் கட்டணம் ஆகியவை இதில் அடங்கும். அதிக எண்ணிக்கையிலான பக்தர்கள் மற்றும் பார்வையாளர்கள், அரசாங்கத்தின் ஒட்டுமொத்த வரி வருவாயிற்குரிய பங்களித்து, அதிகரித்த வசூலாளர்களாக விளங்குகின்றார்கள்.

இரண்டாவதாக, ஸ்பான்சர்ஷிப்/அனுசரணை மற்றும் விளம்பரங்கள் மூலம் திருவிழா வருவாய் ஈட்டப்படுகின்றது. இந்த நிகழ்வு பிரபலமடைந்து அதிக பார்வையாளர்களை ஈர்ப்பதால், வணிகங்களும் நிறுவனங்களும் தங்கள் வியாபாரக் குறிகளை ஃ பிராண்டுகளை திருவிழாவுடன் இணைக்க ஆர்வமாக உள்ளன. ஊர்வலங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் அல்லது விளம்பரப் பொருட்கள் போன்ற நிகழ்வின் வெவ்வேறு அம்சங்களுக்கு அவர்கள் நிதியுதவி செய்கின்றனர். இந்த ஸ்பான்சர்ஷிப் ஒப்பந்தங்கள் விழா ஏற்பாட்டாளர்களுக்கு கணிசமான வருவாயை வழங்குவதோடு ஒட்டுமொத்த பொருளாதார தாக்கத்திற்கும் பங்களிக்கின்றன.

கூடுதலாக, இந்தத் திருவிழா உள்ளூர் கைவினைஞர்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்த ஒரு தளமாக செயற்படுகிறது. சமயப் பொருட்கள், பாரம்பரிய உடைகள், கைவினைப் பொருட்கள் மற்றும் நினைவுப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனையானது விற்பனையாளர்களுக்கு மட்டுமல்லாது வரிவிதிப்பு மூலம் அரசாங்கத்திற்கும் வருமானத்தை ஈட்டுகிறது. இந்தத் திருவிழாவானது இந்தப் பொருட்களுக்குச் சாதகமான சந்தையை உருவாக்கி உள்ளூர் பொருளாதாரத்தை உயர்த்தி, கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை ஆதரிக்கிறது.

மேலும், திருவிழாவின் போது அதிகரித்த பொருளாதார நடவடிக்கை உள்ளூர் பொருளாதாரத்தில் செலவினங்களைத் தூண்டுகிறது. பார்வையாளர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள், போக்குவரத்து, ஷாப்பிங் மற்றும் பல்வேறு சேவைகளுக்கு பணம் செலவழிக்கிறார்கள். இந்த செலவினம் உள்ளூர் பொருளாதாரத்திற்குள் பரவுவதோடு வணிகங்களுக்கான வருமானத்தை உருவாக்குகிறது மற்றும் பெறுமதி சேர் வரி (VAT), சமூக பாதுகாப்பு உதவித்தொகை அறவீடு (SSCL) மற்றும் ஏனைய விற்பனை வரி போன்ற மறைமுக வரிகள் மூலம் வரி வருவாய்க்கு பங்களிப்பு செய்கிறது.

மேலும், யாழ் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழாவைச் சுற்றி கட்டியெழுப்பப்பட்ட நேர்மறையான பிம்பமும் நற்பெயரும் நீண்டகால பொருளாதார தாக்கங்களைக்கொண்டுள்ளது. இந்தத்திருவிழா எதிர்கால சுற்றுலா துறைக்கு ஊக்கமாகச் செயற்படுகிறது, மீண்டும் வருகைகளை ஊக்குவிக்கிறது மற்றும் ஆண்டு முழுவதும் புதிய பார்வையாளர்களை ஈர்க்கிறது. இப்பகுதியில் சுற்றுலாவின் நீடித்த வளர்ச்சி, வேலை வாய்ப்பு உருவாக்கம், வருமானம் ஈட்டுதல் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இலங்கையின் பொருளாதாரத்திற்கு பல வழிகளில் கணிசமான பங்களிப்பை வழங்குகிறது. திருவிழாவின் தாக்கம் அதன் கலாச்சார மற்றும் மத முக்கியத்துவத்திற்கு அப்பாற்பட்டது. உள்ளூர் மற்றும் தேசிய அளவில் பொருளாதார நன்மைகளை உருவாக்குகிறது.

அதிகரித்த சுற்றுலா, உள்ளூர் வணிகங்களுக்கு ஊக்கம், வேலை உருவாக்கம், உட்கட்டமைப்பு மேம்பாடு, கலாச்சார மேம்பாடு மற்றும் அரசாங்கத்திற்கு வருவாய் ஈட்டுதல் ஆகியவற்றின் மூலம் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான ஊக்கியாக செயல்படுகிறது. சுற்றுலாவை ஊக்குவிக்கவும், பாரம்பரியத்தை பாதுகாக்கவும், ஒரு பிராந்தியத்தின் ஒட்டுமொத்த சமூகப்பொருளாதார கட்டமைப்பை மேம்படுத்தவும் கலாச்சார நிகழ்வுகளின் திறனை இது காட்டுகிறது. இத்தகைய பண்டிகைகளின் பொருளாதார நன்மைகளை அங்கீகரிப்பதன் மூலமும் அவற்றைப் பயன்படுத்துவதன் மூலமும் நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பை உந்துவதற்கு இலங்கை அதன் வளமான கலாச்சார பாரம்பரியத்தை மேலும் பயன்படுத்த முடியும்.

எனவே, சந்தர்ப்பங்களினை நல்லமுறையிலும், எமக்குச் சாதகமான முறையிலும் பயன்படுத் துவதன் மூலமாக இலங்கையிலுள்ள ஒவ்வொரு வரும் தனிநபர் வருமானத்தினை உயர்த்த முடிவதுடன் முழு இலங்கை நாட்டினையும் சிறந்த தன்நிறைவு பெற்ற செல்வந்த நாடாக வளர்ச்சி பெற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தன் திருவிழா ஒரு சிறந்த வாய்ப்பாக இருப்பதனால் நீங்கள் எல்லோரும் பயன்பெற வேண்டுகின்றேன்.



# இயற்கை நமக்கு பெருங்கொடை

## நேர்கண்டவர் - ஞானம் கவினி

**வாழையூர் கலைச்சங்கமத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த “காரிகை கனவு “ விருது விழாவில் கிஷோர் பிரசண்யா கௌரவிக்கப்பட்டதுடன், All Ceylon Tamil Cosmetologist Federation நடாத்திய “ சிகரம் தொட்ட தமிழ் பெண்கள் “ விருது விழாவிற்கு அழைக்கப்பட்ட இவ்விளம் முயற்சியாளரின் கனவுகளுக்கு எல்லாம் அவரது குடும்பத்தினரும் கணவனும் அதீத ஒத்துழைப்பு வழங்குவதாக மகிழ்ச்சியோடு சொல்கிறார்.**

இலங்கையின் எழில் மிகு ஊர்களைக் கொண்ட கிழக்கு மாகாணத்தின் வாழைச்சேனைப் பிரதேசத்தில் இயற்கையோடு இணைந்த உடல் பராமரிப்பு உருவாக்கி தற்போது உற்பத்தி நிறுவனம் ஒன்றின் இயக்குனராக இருக்கும் ஆயுர்வேத வைத்தியர் கிஷோர் பிரசண்யா அவர்களை தமிழர் பொருண்மியம் நேர்கண்டது.

தனது இளமைக் கல்வியினை சொந்த ஊரான வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் பயின்று வந்த பிரசண்யா சிறுவயது முதல் கல்விசார் செயற்பாடுகளில் மாத்திரமன்றி விஞ்ஞான, கணித போட்டிகள், தமிழ், ஆங்கில தின போட்டிகள், வர்த்தக, சமூக விஞ்ஞான போட்டிகள் என பல போட்டிகளிலும் பாடசாலைசார்பாக பங்கேற்று மாவட்ட, மாகாண மட்டங்கள் வரை தடத்தை பதித்து இருக்கிறார். உயர்தரக் கல்வியை மட்/வின்சன்ட் உயர்தர தேசிய பாடசாலையில் தொடர்ந்தவர், கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப்பிரிவில் தோற்றி A,B,C சித்திகளை (இரசாயனவியல், உயிரியல், பௌதிகவியல்) பெற்றுக்கொண்டதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின், ஆயுர்வேத மற்றும் சத்திரசிகிச்சை கற்கைநெறிக்கு தெரிவானார்.

நாட்டின் குழப்பமான சூழ்நிலைகள், கொரோனா காலத்து தனிப்படுத்துகை விடுமுறைகள் என தனது 5 வருட பல்கலைக்கழக கல்வியாண்டுகள் மேலும் நீடிப்பதை உணர்ந்த இவர், சமகாலத்தில் பிரபல்யம் அடைந்துகொண்டுவந்த தொழிற்கல்வி கற்கை நெறிகளின்பால் கவரப்பட்டார்.

அந்தவகையில் IICA எனும் தனியார் கல்வி நிறுவனமொன்றில் ஆயுர்வேத அழகு சாதனப்பொருட்களின் உற்பத்தி மற்றும் மூலிகை அழகு சாதனவியல் என இரண்டு கற்கைநெறிகளை அதிவிசேடசித்திகளுடன் (A+) பூர்த்திசெய்து பட்டமும் பெற்றுக்கொண்டார்.

அத்தோடு நின்றுவிடாமல் “ Apply what you learn” எனும் அவரது கோட்பாட்டுக்கு இணங்க, எவ்வித இரசாயன கலப்பும் இன்றி, மூலிகைகள் மாத்திரம் கொண்டு வீட்டிலே தயாரிக்கப்படும் அழகு சாதனபொருட்களுக்கான உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் ஒன்றை நிறுவி Awantika Ayush Herbal Beauty Products எனும் பெயர் சூட்டிக்கொண்டார்.

இதற்கான மூலதனமாக, தான் zoom வாயிலாக நிகழ்த்திய கணித, விஞ்ஞான பிரத்தியேக வகுப்புகளின் மூலம் கிடைத்த பணத்தினையே பயன்படுத்தியிருக்கிறார்.

Awanthika Ayush நிறுவனத்தின் முதல் உற்பத்தி பொருளாக மூலிகை முடி எண்ணெய் தயாரானது. முதலில் 10 போத்தல்கள் மாத்திரமே தயார் செய்யப்பட்டிருந்தபோதிலும், பாவனைக்கு பின்னான வாடிக்கையாளர்களின் நேர்மறையான பின்னூட்டங்களினாலும், பரிந்துரைப்புகளின்பெயராலும் மூலிகை முடி எண்ணெய்க்கான சந்தைக்கேள்வி வெகுவாக அதிகரித்து சென்றது.

அதிகரித்த கேள்வியை ஈடு செய்யும்வகையில் உற்பத்திகள் கூட்டப்பட்டதுடன் இதர மூலிகையியல் அழகு சாதன உற்பத்திபொருட்களும் அறிமுகம் செய்யப்பட்டது. (face creams, face pack, scrubs, lip balms, soaps, bodylotion, face mask, shampoo, face wash, serum என 25 க்கும் மேற்பட்ட, skin types க்கு ஏற்ற உற்பத்திப் பொருட்கள் இதில் அடங்குகின்றன. ) குடும்பத்தாரினதும், நண்பர்களினதும் ஆதரவுடன் Awantika Ayush வணிகம் மேலும் மெருகூட்டப்பட்டதுடன், உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாட்டு வாடிக்கையாளர்களிடையேயும் இம்மூலிகை உற்பத்திகள் பிரபல்யம் அடையத் தொடங்கியது .

அவ்வாறாக அவுஸ்திரலியா, கனடா, கட்டார், சிங்கப்பூர், அமெரிக்கா, சுவிச்சர்லாந்து, ஜெர்மனி, ஐக்கிய இராச்சியம், இந்தியா போன்ற நாடுகளுக்கும் இவை ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. பிரஸண்யா கிஷோர், தற்போது ஒரு ஆயுர்வேத வைத்தியராகவும், அதேநேரத்தில் யுறயவெமைய யுலரளா வணிகத்தின் உரிமையாளராக, வளர்ந்துவருமொரு இளம் தொழிலதிபராகவும் திகழ்வது பாராட்டுக்குரியது.



**கிஷோர் பிரசண்யா**

சிறு வயது முதல் ஆரம்பித்த தனது வைத்திய கனவோடு ,ஆயுர்வேத வைத்தியராக மாத்திரமன்றி தற்போது ஒரு சிறந்த தொழில் முனைவோராகவும் பலருக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்து வருகிறார்.

தனது ஆயுர்வேத வைத்தியத்துறையில் மேலும் பல படி வளர வேண்டும் என்றும் அதிகமாக கற்றுத் தேறவேண்டும் என்றும் ஆர்வம் உள்ள இவர்தனது தொழிலின் மீது அதிக அக்கறையும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார்.

சமூகத்தில் தற்போது பிரபல்யம் அடைந்து வரும் அழகு சாதன பொருட்களை இயற்கையாக கிடைக்கும் மூலிகைகளை பயன்படுத்தி மிகச் சிறப்பான முறையிலே தனது உற்பத்திகளை சந்தைப்படுத்துகிறார்.

தான் , தனது குடும்பம் என்று நின்றுவிடாது சமூகத்திற்கும் ஏதேனும் நல்லவற்றை செய்து விட வேண்டும் என்ற துடிப்போடு இருக்கும் பிரசண்யாவிடம் நீங்கள் இயற்கை பற்றிய விழிப்புணர்வுகளை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கு தயாராக இருக்கிறீர்களா ?என்று வினவினோம்.

அதற்கு அவர் ஆம் , நிச்சயமாக, ஏற்கனவே முடிந்த அளவிற்கு சில




விழிப்புணர்வு கருத்தமர்வுகளை செயல்படுத்தி இருக்கிறேன் இன்னும் யாரேனும் அழைத்தால் அல்லது செய்ய வேண்டிய இடங்களை கண்டுபிடித்தாள் நான் விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்துவதற்கு தயாராக இருக்கிறேன் என்கிறார்.

தற்போதம் பலரினதும் ,இந்த இளம் சமுதாயம் இப்போது எங்கே போய்க்கொண்டிருக்கிறது? என்ற கேள்விக்கு விடையாக பிரசண்யா போன்ற பலரும்

இன்னும் இந்த இளம் சமூகம் சமூக அக்கறையோடு தான் பயணித்துக் கொண்டு இருக்கின்றது என்பதை சொல்லி நிற்கின்றனர்.

அண்மையில் வாழையூர் கலைச்சங்கமத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த “காரிகை கனவு “ விருது விழாவில் அவர் கௌரவிக்கப்பட்டத் துடன், All Ceylon Tamil Cosmetologist Federation நடாத்திய “ சிகரம் தொட்ட தமிழ் பெண்கள்” விருது விழாவிற்கு அழைக்கப்பட்ட இவ்விளம் முயற்சியாளரின் கனவுகளுக்கு எல்லாம் அவரது குடும்பத்தினரும் கணவனும் அதீத ஒத்துழைப்பு வழங்குவதாக மகிழ்ச்சியோடு சொல்கிறார்.

தற்போது தனது தொழில் கூடத்தில் இரண்டு பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதோடு இன்னும் பலருக்கு தனது உற்பத்திகள் தொடர்பான கற்பித்தலையும் செய்திருக்கிறார் பிரசண்யா. ஒரு பெண் திட்டமிட்டு ஒரு முனைவை ஆரம்பிக்கும் போது அவனுக்கு துணையாக கணவனும் அமைந்துவிடின்

அந்த முனைவின்பால் அவள்வெற்றி படிகளை எட்டிப் பிடிப்பதை யாராலும் தடுத்து விட முடியாது .அப்படித்தான் பிரசன்னாவுக்கும் அவளது கணவனும் சகோதரனும் மற்றும் குடும்பத்தினரும் துணையாக நிற்கின்றனர் என்கிறாள்.

இவரது தரமான உற்பத்திகளை கண்டு வியப்புற்ற நாங்கள் உங்கள் உற்பத்திக்கான மூலப் பொருட்களை எவ்வாறு பெற்றுக்கொள்கிறீர்கள் என்று என்று கேட்டபோது? நான் எனதுபிரதேசத்தில்கிடைக்கும் பாசிக்குடா கடற்கரையை அண்டிய பகுதிகளில் தான் மூலிகைகளை பெரும்பாலும் பெற்றுக் கொள்கிறேன். விலை கொடுத்து வாங்க தேவையில்லாத அளவிற்கு விலைமதிக்க முடியாத மூலிகைகள் பலவற்றை இந்த மண் நமக்கு கொடுத்திருக்கின்றது. மூலிகைகளை நான் எனது பணியாளர்களுடாக உள்ளூர் நிலப்பகுதிகளிலேயே பெற்றுக்கொள்கிறேன். சில வேளைகளில் இங்கே கிடைக்கப் பெறாத பதார்த்தங்களை மாத்திரம் கடைகளில் பெற்றுக்கொள்கிறோம் கூடிய பங்கு நமது இயற்கை நமக்கு எல்லாவற்றையும் வரமாக தந்து விட்டிருக்கிறது என்று நமது கேள்விக்கு பதில் அளித்த அவர்,

இயற்கை நமக்கு தந்திருக்கும் கொடைகள் மிகவும் பிரதானமானது உடலின் அத்தனை பாகங்களுக்குமான சக்திகளையும் நல் புத்துணர்ச்சிகளையும் கொடுக்கக்கூடிய அத்தனை மருத்துவ குணங்களும் இந்த மூலிகைகளுக்குள் அடங்கி இருக்கிறது என்று ஒரு ஆயுர்வேத வைத்தியராக நமக்கு விளக்கம் கொடுக்கிறார்.

உற்சாகமாக பேசும் பிரசன்னாவிடம் உங்கள் கனவுகள் பற்றி சொல்லுங்கள் ? என்று வினவினோம்

பிரசண்யாவுக்கு பிடித்த துறையிலே இன்னும் அதிகமாய் கற்க வேண்டும் என்று அதிக ஆர்வத்தோடு இருக்கிறார்

கற்பதோடு மாத்திரம் நின்றுவிடாமல் எனது தொழில் முயற்சியில் இன்னும் பல மடங்கு முன்னேற வேண்டும் அது தொடர்பான கற்கைநெறிகளையும் மேலும் கற்க வேண்டும் பலருக்கு வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் சமூகத்தில் இயற்கையோடு இணைந்து வாழும் பழக்கத்தை உருவாக்க வேண்டும் என்று அடுக்கடுக்காக பல நன்மைகளை சமூகத்துக்காகவும் தன் சார்ந்தவர்களுக்காகவும் யோசிக்கும் பிரசண்யாவிடமிருந்து இந்த இளம் சமூகம் நன்மைகளை நோக்கி நடந்து கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கையோடு விடை பெற்றோம்..



# தங்கத்தை புதைத்து வைத்துள்ள பனை



லதா கந்தையா

இலங்கையின் தலைப்பகுதியாக அலங்கரித்து நிற்கும் யாழ்ப்பாணத்திற்கு அழகு சேர்க்கும் இயற்கைத்தாவரமும் பல்லாண்டுப்பயிராகவும் விளங்குவது பனை வளம் ஆகும். இது யாழ்ப்பாணத்தின் அடையாளமாகவும் தேவதரு என்று சிறப்பித்தும் கூறப்படுகின்றது. இந்த மரத்தின் வேரிலிருந்து தண்டு,பட்டை,ஓலை, நுங்கு ,பனம்பழம், பனங்கிழங்கு என பல்வேறு அங்கங்களிலும் தங்கத்தைப்புதைத்து வைத்துள்ளது.

கற்பக விருட்சம் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தவரின் பசியை ஆற்றியது மட்டுமன்றி இந்திய அமைதிப்படை வந்துலாவிய காலங்களிலும் அதற்குப்பின் வந்த பொருளாதார நெருக்கடிக்காலத்திலும் ஆடைகளை துவைக்கும்சவர்க்காரமாகவும் பனம் பழங்கள் உதவியுள்ளன. பனம்பழத்தை யாழ்ப்பாணத்தவர்கள் விரும்பி உண்பதால் அவர்களை "பனங்கொட்டை சூப்பிகள் "என பட்டப் பெயரிட்டு அழைப்பதுமுண்டு.

1980 ஆம் ஆண்டுக்கு முன்பு சுமார் நூறு லட்சம் பனைமரங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தைச்சூழ வளமாக நின்றுள்ளன. சீதன ஆதனமாகவும்பனைவளமுடையவன் பணக்காரனாகவும் , தங்கள் தங்கள் நிலங்களிலே பனை மரங்களிருப்பதை பெறுமதியாகவும் வாழ்வாதாரமாகவும் நிலைக்கும்மனநிலை உடையவர்களாகவும் வாழ்ந்துள்ளனர். அன்றைய காலத்தில் பெரும்பாலான வீடுகள் பனையோலையால் வேயப்பட்டிருந்துள்ளன. பனை ஓலையால் வீடுமேய்வோர் செல்வச்செழிப்புடையோராக கருதப்பட்டுள்ளனர். பனை ஓலையால் வேயப்பட்ட வீடுகள் நான்கைந்து வருடங்கள் மழைக்கும் வெயிலுக்கும் பாதுகாப்போடு காத்துள்ளன. வேலிகளை விதம்விதமாக அடைத்துள்ளனர். வீடுகளுக்கு தீராந்திகளை வளைகளை சிலாகைகளை பெற்றுக்கொள்வதற்கு பனைமரங்கள் உதவியுள்ளன. நாற்பது வயது கடந்த பனைமரங்களை பார்த்துப்பார்த்து வெட்டியிருக்கிறார்கள். ஏனெனில் வயது மூப்புக்கண்ட மரங்கள் பலமுடையவை என்பதாலாகும். இவை இலகுவில் உக்காது. நூற்றாண்டு கடந்தும் பயன் கொடுத்துள்ளன.

> **கற்பக விருட்சம் ஒரு காலத்தில்யாழ்ப்பாணத்தவரின்பசியை ஆற்றியது மட்டுமன்றி இந்திய அமைதிப்படை வந்துலாவிய காலங்களிலும் அதற்குப்பின் வந்த பொருளாதார நெருக்கடிக்காலத்திலும் ஆடைகளை துவைக்கும்சவர்க்காரமாகவும் பனம் பழங்கள் உதவியுள் ளன. பனம்பழத்தை யாழ்ப்பாணத்தவர்கள்விரும்பிஉண்பதால் அவர்களை "பனங்கொட்டை சூப்பிகள்" என பட்டப்பெயரிட்டு அழைப்பதுமுண்டு.**





தற்காலத்தில் அதிகரித்த ஆசை, குடியிருப்புகளை உருவாக்கல், நிலத்துண்டாடல்கள், அதிகரித்த சனத்தொகை, விடுதிகள், உல்லாச விடுதிகள் என தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க வகை தொகையற்று பனைமரங்கள் வெட்டப் படுகின்றன. அது மட்டுமன்றி உள்நாட்டு யுத்த கால நிலவரத்தால் இலட்சக்கணக்கான

தமிழர் பொருளியம்
வாரமலர்
TAMILS ECONOMY



பனைமரங்கள் காப்பரண்களுக்காகவும் பதுங்கு குழிகளுக்காகவும் வெட்டப்பட்டுள்ளன.

இதன்பிறகு தற்போது கடும் சட்டமாக வரையறுக்கப்பட்ட வகையில் மரங்களை அனுமதி பெற்று வெட்டுவதற்கும் கிராம அலுவலரின் அனுமதி மற்றும் நேரடி தரிசிப்பு முத்திரையிடல் தறிப்பதற்கான போதிய காரணம் என சட்ட விழுமிய நெருக்கடியால் பனைமரங்களும் உயிர் பிழைத்துக்கொண்டன. ஆனால் அதனையும் சாட்டை செய்யாத மனிதர்களாக உள்நாட்டு வியாபாரிகள், முஸ்லீம் வர்த்தகர்கள், புலம்பெயர்ந்து வந்து வர்த்தகத்தை மேற்கொள்ளும் புலம்பெயர்ந்த வர்த்தகர்கள், நிலத்தை வாங்கியும் விற்றும் அதிக தரகுப்பணத்தை ஈட்டிக்கொள்ளும் காணித்தரகர்கள் போன்றோரால் சட்டச்சிக்கல்களை கபடமாக தாண்டிவிடும் எண்ணத்தோடு பனைமரங்களுக்கும் அதன் இளையதான வடலிகளையும் தீ மூட்டிக்கொளுத்திவிடுகிறார்கள். இவ்வாறான கபட முயற்சிக்கு பக்கபலமாக அரசியற்தலைவர்களும் வழிகாட்டுகிறார்கள். பணப்பேராசையால் சுற்றுச்சூழல் நிலமைகளை கருத்தில் கொள்ளாமல் தீவினை புரிகிறார்கள். இள மரங்களையும் வடலிகளையும் வேறொரு இடத்தில் நடும் முயற்சிகளை கூட மேற்கொள்ள முடியும்.

உண்மையிலேயே பனைகள் நிற்கும் இடங்களைச்சூழ அவதானித்துப்பாருங்கள் அங்கு நன்னீர் வளம் செழிப்பாக இருக்கும். பனைமரங்கள் உவர்நீர் கொண்ட பகுதிகளில் நின்றாலும் நன்னீரைக்கொடுக்கும் என்பதற்கு யாழ்ப்பாணத்தின் காரைநகர் சிறந்த உதாரணம். காரைநகர்ப்பிரதேசத்திலே தற்போது இரண்டுலட்சத்துக்கு மேற்பட்ட பனைகளுள்ளதாக கூறப்படுகிறது. கடல்மட்டத்தோடு நெருங்கியிருக்கும் அந்த நிலத்து மக்களுக்கு நன்னீரைக்கொடுக்கும் தெய்வீக தருவாக பனைமரங்கள் விளங்குகின்றன. இது ஒரு அதிசயமே. பனைமரங்களில் இருந்து கிடைக்கும் நுங்கு, பனம்பழம், பனங்கிழங்கு ,பதநீர் போன்றவற்றிலே கல்சியம் இரும்புச்சத்து விற்றமின் டீ போன்றவற்றைக்கொண்டுள்ளன. உடற்பருமனைக்குறைக்கின்றன. நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கின்றது. உடலை குளிர்ச்சியாக வைத்திருக்கின்றன. மலச்சிக்கலுக்கு மருந்தாகிறது. இதய ஆரோக்கியத்தை பேணுகின்றது. பதநீரில் இருந்து வெல்லம் கருப்பனி என்பன தயாரிக்க முடியும்.பனை ஓலைகள் கூரை வேய்வதற்கும் வேலியடைப்பதற்கும் மட்டுமன்றி கைவினைப்பொருட்களாக பெட்டி, கடகம்,பாய், தண்ணீர் ஊற்றும் பட்டை, நீர்க்கோலி வாளியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. விளையாட்டுப்பொருட்களான காற்றாடி பொம்மை செய்யப்பயன்பட்டுள்ளது.

வேரினால் நீரைத்தேக்கி வைத்து நிலத்தடி நீரினை பாதுகாத்துள்ளது. மண்சரிவை தடுக்கும் பிடிமானமுடையவையாக இருக்கின்றன. அதனால் தான் கடற்கரைகளிலும் குளங்கள் ஆறுகள் வயற்பகுதிகள் எங்கும் பனைகள் நடப்பட்டிருந்தன. இவை உயிர் வேலிகளாகவும் பயன்கொடுத்தன. பனைமரத்தின் தண்டில் இருந்து மரவேலைப்பொருட்களாக உலக்கை வீட்டுக்கூரை போன்றவற்றுக்கு பயன்பட்டன.

யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவுக்கும் மிக நெருக்கத்தை கொடுப்பதில் பனைமரங்கள் காரணமாக இருக்கின்றன. இரு நிலப்பரப்பிலும் பனைகள் செறிந்துள்ளன. பனையில் இருந்து 800இற்கு மேற்பட்ட பயன்கள் உள்ளதாக பெர்கூசென் என்கின்ற ஆங்கிலேயர் புத்தகமாக வெளியிட்டுள்ளார்.

ஆதிகால தமிழர்களின் கல்விச்செல்வமாகவும் சீதன ஆதனமாகவும் விளங்கியுள்ளன. பனை ஓலைகளில் இருந்தே ஓலைச்சுவடிகள் தயாராகின. கல்வெட்டுக்களிலும் சங்க இலக்கியங்களிலும் இதிகாச புராணக்கதைகளிலும் திருக்குறளிலும் பனை தன்னை சிறப்பித்து கூறியுள்ளனர். ஒரு வலிமை மிக்க மரமாகவும் தேவதருவாகவும் குறிப்பிடும் பனைமரங்களிலே ஆண் பெண் என வகைகளுண்டு. பெண் பனைகள் காய்க்கும் ஆண்பனை காய்ப்பதில்லை. கள் அதிலிருந்தே எடுக்கப்படுவதாக கூறப்படுகிறது.

தமிழர்களிடையே இருக்கும் ஏற்றத்தாழ்வு உணர்வை நன்கு படம்பிடித்த அந்நியர்கள் அவர்களிடையே முறுகலை தோற்றுவிக்கவும் அவர்களின் அறியாமையை சாதகமாக்கி மிகத்தந்திரமாக மிகப்புடகமாக, தமிழர்களின் மிகப்பெறுமதியான அத்தனை வளங்களையும் மூலிகைகளையும் தகுதிக்குறைவு என அடையாளப்படுத்தினர். தமிழரின் தலைவிதி! அதுவே எதிரிகளுக்கு சாதகமாகவும் தமிழினத்தின் சாபமும் ஆனது.



# வாத்து, மீன், கோழி, முயல், ஆடு சுருள்பாசி பலவித பயிர்கள்...

## இலங்கைத் தமிழ் அகதிகள் நடத்தும் கூட்டுப் பண்ணை

நிவேதா

செங்கல்பட்டு மாவட்டம், தாழம்பூர்-நத்தம் கிராமத்தில் 12 ஏக்கர் பரப்பில் செழிப்பாகக் காட்சி அளிக்கும் இப்பண்ணையில்... தென்னை, சுருள்பாசி, பசுந்தீவனம், காய்கறிகள், கீரை வகைகள் உள்ளிட்ட பலவிதமான பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆடு, மாடு, கோழி, வாத்து, மீன் உள்ளிட்டவையும் இங்கு உள்ளன. அசோலா உற்பத்தி, மண்புழு உரம் தயாரிப்பு ஆகியவையும் இங்கு நடைபெறுகின்றன.

ஈழ ஏதிலியர் மறுவாழ்வு கழகம் சார்பில் நடத்தப்படும் இந்தப் பண்ணையில் ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

கோழிகளுக்கு முருங்கைக் கீரை கொடுத்துக்கொண்டிருந்த இப்பண்ணையின் ஒருங்கிணைப்பாளர் இரத்தினராஜசிங்கம், இன்முகத்தோடு வரவேற்று, இப்பண்ணையின் செயல்பாடுகள் குறித்த தகவல்களைப் பகிர்ந்துகொண்டார்.

“1983-ம் வருஷம், இலங்கையில போர் ஆரம்பமானதும், அங்கயிருந்து தமிழ்நாட்டுக்குப் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களோட நலனுக்காக, ஈழ ஏதிலியர் மறுவாழ்வு கழகம் தொடங்கப்பட்டது. இங்க குடியேறின ஈழ மக்களோட வாழ்வாதாரத்துக்காக, அந்தக் கழகம் சார்பா, 1996-ம் வருஷம், இந்த ஊருல நிலம் வாங்கி விவசாயம் செய்ய ஆரம்பிச்சோம்.

ஆரம்ப காலங்கள்ல 3 ஏக்கர்ல விதைநெல் உற்பத்தி செஞ்சு, திருப்போரூர் பகுதியில விற்பனை செய்தோம். விவசாயப் பணியாளர்கள் பற்றாக்குறையால், நெல் சாகுபடியைக் கைவிட்டோம். ஏற்கெனவே இந்தப் பண்ணையில இருந்த 150 தென்னை மரங்கள் மூலமாவும், சுருள்பாசி, காய்கறி உற்பத்தி மூலமாவும் வருமானம் கிடைச்சது. 2007-ம் வருஷம்வரைக்கும் இரசாயன விவசாயம்தான் செஞ்சு கிட்டு இருந்தோம்.



ஆடு, மாடு, கோழி, வாத்து உள்ளிட்ட கால்நடைகள் வளர்க்குறதுனால, இயற்கை விவசாயத்துக்குத் தேவையான இடுபொருள்கள் போதுமான அளவுக்குக் கிடைக்குது. தென்னை, காய்கறிகள், கீரை வகைகள், பசுந்தீவனம் உள்ளிட்ட பயிர் களுக்கு... மாட்டு எரு, ஆட்டு எரு, கோழி எரு, மண்புழு உரம், பஞ்சகவ்யா, அமுதக் கரைசல், மீன் அமிலம் உள்ளிட்ட இடு பொருள்கள் பயன்படுத்துறோம்.

2 ஏக்கல 150 தென்னை மரங்கள் இருக்கு. ஒரு வருஷத்துக்கு ஒரு மரத்துல இருந்து 60-70 காய்கள் கிடைக்கும். இங்க விளையுற தேங்காய் சுவையா இருக்கும். நாங்களா காய்கள் பறிக்குறதில்ல. முதிர்ச்சி அடைஞ்சு தானா விழும் வரைக்கும் காத்திருப்போம். கீழ விழும் தேங்காய்களைச் சேகரிச்சு, கொப்பரையா மாத்தி, எண்ணெய் ஆட்டி விற்பனை செய்றோம். 1 லிட்டருக்குக் குறைந்தபட்சம் 200 ரூபாய்ல இருந்து அதிக பட்சம் 250 ரூபாய் வரைக்கும் விலை கிடைக்கும். தேங்காய் புண்ணாக்கு விற்பனை மூலமாவும் வருமானம் கிடைக்குது. ஒரு கிலோ 50 ரூபாய்னு அதை விற்பனை செய்றோம்.

ஒரு ஏக்கர்ல காய்கறிகளும் கீரை வகைகளும் சாகுபடி செய்றோம். கத்திரி, வெண்டை, சுரைக்காய், பூசணி, மிளகாய் உள்ளிட்ட பலவிதமான காய்கறிகள் சுழற்சி முறையில பயிர் பண்றோம். புளிச்சக்கீரை, அரைக்கீரை, தண்டுக்கீரை, அகத்திக்கீரை உற்பத்தி செய்றோம். இரசாயன நச்சுத்தன்மை இல்லாமல், இயற்கை முறையில உற்பத்திச் செய்றதுனாலயும், நல்லா சுவையா இருக்குறதுனாலயும் இந்தப் பகுதியில உள்ள ஏராளமான மக்கள் எங்க பண்ணைக்கே வந்து காய்கறிகள், கீரைகள் வாங்கிக்கிட்டுப் போறாங்க. சந்தை நிலவரத்தைப் பொறுத்து விலை நிர்ணயம் செய்வோம். இயற்கை விவசாயத்துல உற்பத்தி செய்றோம்ங்கிறதுனால, அதிக விலை வச்சு விற்பனை செய்றதில்ல. காய்கறித் தோட்டத்துல, வரப்பு ஓரமா வாழை மரங்கள் வச்சிருக்கோம். இலை, காய், தண்டு விற்பனை மூலமாவும்





வருமானம் கிடைக்குது.

இந்தப் பண்ணை தொடங்கப்பட்ட நாள்ல இருந்தே ஒரு ஏக்கர் பரப்புல சுருள்பாசி உற்பத்தி பண்ணிக்கிட்டு இருக்கோம். காய்கறிகளைவிடவும் இதுல பல மடங்கு புரதச்சத்து அதிகம். நாங்க உற்பத்தி செய்ற சுருள்பாசியை, ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள ஈழ ஏதிலியர்களுக்குக் கட்டணம் இல்லாம கொடுக்குறோம். அவங்களோட தேவைக்குப் போக மீதியுள்ள சுருள்பாசியை, ஒரு கிலோ 800 - 1,000 ரூபாய்னு மற்ற ஈழ ஏதிலியர்களுக்கு விற்பனை செய்றோம். இதை வெளியில விற்பனை செஞ்சா, 1 கிலோவுக்கு 1,500 - 2,000 ரூபாய் விலை கிடைக்கும். ஆனா, அதுமாதிரி விற்பனை செய்றதில்லை.

எங்க பண்ணையில ஜெர்சி கலப்பின மாடுகள் 14 இருக்கு. போதுமான அளவுக்கு நல்லா சத்தான பசுந்தீவனம் கொடுத்தாதான் மாடுகள் நல்லா ஆரோக்கியமா வளரும். அதனால, 2 ஏக்கர் பரப்புல கோ-3, கோ-4, கம்பு நேப்பியர் உள்ளிட்ட பசுந்தீவன பயிர்கள் சாகுபடி செய்றோம். மாடுகள் நல்லா காலாற நடந்தாதான், நோய் இல்லாம ஆரோக்கியமா இருக்கும். 2 ஏக்கர்ல சாகுபடி செய்ற பசுந்தீவனமே 14 மாடுகளுக்கும் போதுமானதா இருக்கு. ஆனாலும், மாடுகள் தினமும் நல்லா நடந்துபோய், புல், பூண்டுகளையும்களைச்செடிகளையும்சாப்பிடணும்கிறதுக்காக, 2 ஏக்கர் பரப்பை மேய்ச்சல் நிலமா பயன்படுத்துறோம்.

2,200 சதுர அடி பரப்புல, மண்புழு உரம் தயாரிப்பு நிலையம் அமைச்சிருக்கோம். இங்க உற்பத்தி செய்ற மண்புழு உரத்தை எங்க பண்ணையில உள்ள தென்னை, காய்கறி உள்ளிட்ட பயிர்களுக்குப் பயன்படுத்திக்கிறோம். எங்க தேவைக்குப் போக மீதியுள்ள மண்புழு உரத்தை வெளியில விற்பனை செய்றோம். 1,000 சதுர அடி பரப்புல அசோலா உற்பத்திக்கான இடம் இருக்கு. 6 அடி நீளம், 3 அடி அகலம், முக்கால் அடி ஆழம் கொண்ட 50 பாத்திகள் அமைச்சு, அதுல தார்ப்பாலின் சீட் போட்டு, தண்ணீர் நிரப்பி அசோலா உற்பத்தி நடக்குது. இந்தப் பாத்திகள்ல இருந்து 15-20 நாள்களுக்கு ஒரு தடவை அசோலாவை எடுத்து... ஆடு, மாடு, கோழி, வாத்து மற்றும் மீன்களுக்குக் கொடுப்போம்.

சிறுவிடை, பெருவிடை, கடக்நாத்... உள்ளிட்ட இனங்களைச் சேர்ந்த 400 நாட்டுக்கோழிகள் வளர்க்குறோம். இந்தக் கோழிகள் மூலம் கிடைக்குற முட்டைகள் மற்றும் குஞ்சுகள் விற்பனை மூலமா கணிசமான வருமானம் கிடைக்குது. 1 முட்டை 15 ரூபாய்னு விற்பனை செய்றோம். 1 நாள் வயசுடைய கோழிக்குஞ்சு 45 ரூபாய், 1-2 மாச வயசுடைய வளர்நிலை கோழி 150-200 ரூபாய்னு விற்பனை செய்றோம். தாய் கோழிகளை ஒரு வருஷம் வரைக்கும்தான் இங்க வச்சிருப்போம். அதுக்குப் பிறகு முட்டையிடுற திறன் குறைய ஆரம்பிச்சிடும். அதனால, இறைச்சிக் கோழிகளாக விற்பனை பண்ணிடுவோம். ஒரு தாய்க்கோழி 2 கிலோ எடை இருக்கும். ஒரு கிலோவுக்கு 350 ரூபாய் வீதம் கிடைக்கும்.

கோழிகளை, காலையில 6 மணியில இருந்து சாயந்திரம் 6 மணி வரைக்கும் மேய்ச்சலுக்கு விட்டுவிடுவோம். புல், பூண்டு, புழு, பூச்சிகளைச் சாப்பிட்டு நல்லா ஊட்டமா வளருது. ஆனாலும், எந்த விதத்துலயும் தீவனப் பற்றாக்குறை ஏற்படக் கூடாது... போதுமான அளவுக்குப் பசுந்தீவனம் கொடுக்கணுங்கற நோக்கத்தோடு 25 முருங்கை மரங்கள் வளர்க்குறோம்.

எங்க கோழிகளுக்குத் தினம்தோறும் முருங்கைக்கீரைக் கொடுப்போம். நல்லா விரும்பி சாப்பிடும். இது சத்தான தீவனம். இதைக் கொடுக்குறதுனாலதான், எங்க கோழிகள் நல்லா ஆரோக்கியமா வளருது. பெரும்பாலும் நோய்த்தாக்குதல்கள் ஏற்படுறதில்லை. பசுந்தீவனம் மட்டுமல்லாம... அடர்தீவனமும் கொடுக்குறோம். சோளம், கோதுமை தவிடு, கருவாட்டுத்தூள், தாது உப்புகள்... இவற்றையெல்லாம் ஒண்ணா கலந்து அரைச்சு, அடர் தீவனம் தயார் செய்றோம். இதை எங்களால தயார் செய்ய முடியாத நேரங்கள்ல காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையத்துல இருந்து கோழித் தீவனம் விலைக்கு வாங்கிக்குவோம். அங்க வாங்குற தீவனம் நல்ல தரமா இருக்கும். விலையும் நியாயமா இருக்கும். இயன்ற வரைக்கும் கடைகள்ல தீவனம் வாங்குறதை தவிர்ப்போம். வெயில் காலத்துல உடல் வெப்பத்தைத் தணிக்குறதுக்காகவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துறதுக்காக எங்க கோழிகளுக்கு நெல்லிக்காய் கொடுப்போம். எங்க பண்ணையில நெல்லிக்காய் மரங்கள் 5 இருக்கு.

25 நாட்டு வாத்துகளும், 15 பங்களா வாத்துகளும் வளர்க்குறோம். மேய்ச்சல் மூலம் கிடைக்குற புல், பூண்டு, புழு, பூச்சிகளைச் சாப்பிட்டு வளர்றதுனால வாத்துகளுக்குத் தீவனம் தர வேண்டியதில்லை. ஆனாலும், என்னோட மனநிறைவுக்காக, இரவு நேரத்துல வாத்துக் கொட்டகையில தவிடு போட்டு வைப்போம். நாட்டு வாத்து முட்டை 20, பங்களா வாத்து முட்டை 20 ரூபாய்னு விற்பனை செய்றோம்.

ஒவ்வொரு வருஷமும் ஜூன் மாசம் வான்கோழிக் குஞ்சுகள் விலைக்கு வாங்கிக்கிட்டு வந்து வளர்க்க ஆரம்பிப்போம். பெரிய கோழிகளாக வளர்த்து, டிசம்பர் மாசம் கிறிஸ்துமஸ் சமயத்துல விற்பனை செய்வோம். நல்ல விலை கிடைக்கும். பாம்புகள் வராமல் தடுக்க, கின்னிக்கோழிகள் வளர்க்குறோம். வெளியாள்கள் யாராவது பண்ணைக்குள்ள நுழைஞ்சா, உடனே சத்தம் எழுப்பும்.

25 ஆடுகள் இருக்கு. இது மூலமா கிடைக்குற குட்டிகளை வளர்த்து விற்பனை செய்றது மூலமாவும் வருமானம் கிடைக்குது. ஆடுகளோட பசுந்தீவன தேவைக்காக, எங்க பண்ணையில 15 கிளிரிசிடியா மரங்கள் வளர்க்குறோம். 5 சென்ட் பரப்புல வேலி மசால் சாகுபடி செய்றோம். மேய்ச்சல் மூலமாவும் ஆடுகளுக்குத் தீவனம் கிடைக்குது.

ஜெர்சி கலப்பினத்தைச் சேர்ந்த 14 மாடுகள் வளர்க்குறோம். தினமும் குறைந்தபட்சம் 10 லிட்டர் பால் கிடைக்குது. 1 லிட்டர் 80 ரூபாய்னு விற்பனை செய்றோம். இந்த மாடுகளுக்கு, எங்க பண்ணையில உற்பத்தி செய்ற கோ-3, கோ-4, கம்பு நேப்பியர் உள்ளிட்ட பசுந்தீவனம் கொடுக்குறோம். உலர் தீவன தேவைக்காக, சுற்றுவட்டாரப் பகுதிகள்ல உள்ள விவசாயிகள்கிட்ட இருந்து வைக்கோல் விலைக்கு வாங்குவோம். பால் கறவையில உள்ள மாடுகளுக்கு மட்டும் அடர் தீவனம் கொடுப்போம். 70 சதவிகிதம் தவிடு, 30 சதவிகிதம் கடலைப்புண்ணாக்கு



கலந்து தினமும் ஒரு மாட்டுக்கு 3-6 கிலோ அடர் தீவனம் கொடுப்போம்.

40 அடி நீளம், 20 அடி அகலத்துல மாட்டுக்கொட்டகை அமைச்சிருகோம். 60 அடி நீளம், 20 அடி அகலத்துல கோழிக் கொட்டகை, 30 அடிநீளம், 20 அடி அகலத்துல ஆட்டுக்கொட்டகை, 15 அடி நீளம், 15 அடி அகலத்துல வாத்துக்கொட்டகையும் இருக்கு. காற்றோட்டமும் வெளிச்சமும் போதுமான அளவுக்கு இருந்தாதான் கால்நடைகள் ஆரோக்கியமா வளரும். அதனாலதான் அதிகப் பரப்புல தாராளமா கொட்டகை அமைச்சிருக்கோம்.

அரை ஏக்கர்ல குளம் அமைச்சு பங்காசியஸ் மீன் வளர்க்குறோம். 1,000 குஞ்சுகள் விடுவோம். இந்த மீன்கள் நல்லா வேகமா வளரும். தவிடு, கடலைப்புண்ணாக்கு, தேங்காய் புண்ணாக்கு கலந்து தீவனம் போடுவோம். பொதுவா, பங்காசியஸ் மீன் வளர்ப்புல ஈடுபடக்கூடியவங்க, கோழி இறைச்சி போடுவாங்கனு கேள்விப்பட்டிருக் கேன். ஆனா, நாங்க அதைப் போடுறதில்லை. கோழி இறைச்சி போட்டா, குளத்தோட சுகாதாரம் கெட்டுப்போயிடும். அது ஒட்டு மொத்த பண்ணையையுமே பாதிக்கும். குளத்துல குஞ்சுகள் விட்டதுல இருந்து 4-5 மாசங்கள்லயே ஒரு மீனுக்கு 500-600 எடை கிடைக்குது. 8-10 மாசங்கள்ல ஒரு மீன், சராசரியா 1 கிலோ எடை இருக்கும். இந்தப் பகுதி மக்கள், எங்க பண்ணைக்கு நேரடியா வந்து இந்த மீன்களை வாங்கிக்கிட்டுப் போயிடுறாங்க. இது, ரொம்ப சுவையா இருக்கு. இதுல அதிகமா முள் இருக்காது. நடு முள் மட்டும்தான் இருக்கு. 1 கிலோ உயிர் மீன் 150 ரூபாய்னு விற்பனை செய்றேன்.

தேங்காய் எண்ணெய், சுருள்பாசி, காய் கறிகள், கீரை வகைகள், மண்புழு உரம், அசோலா, நாட்டுக்கோழி முட்டை, கோழிக் குஞ்சு, இறைச்சிக்கோழி, ஆடு, வாத்து முட்டை, மீன் உள்ளிட்டவை விற்பனை மூலம், ஒரு வருஷத்துக்கு எல்லாச் செலவுகளும் போக, 12,00,000 லட்சம் ரூபாய் லாபம் கிடைக்குது. ரொம்ப ஏழ்மையான நிலையில இருக்குற ஈழ ஏதிலிய குடும்பங்களோட கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அடிப்படைத்தேவைகளுக்கு இந்தப் பணம் பயன்படுது. இந்தப் பண்ணையில 8 விவசாயப் பணியாளர்கள் நிரந்தரமா தங்கி விவசாயப் பணிகள் செய்றாங்க. இவங்களோட குடும்பத்தினரும் இதுல உழைப்பு செலுத்துறாங்க. இவங்க எல்லாரும் ஈழ ஏதிலியர்கள்தான். இயற்கை விவசாயம் செய்றதுனால, அவங்களுக்கும் ஆரோக்கியமான உணவு கிடைக்குது" என்று சொல்லி விடை கொடுத்தார்.


## பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

### கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# வேளாண்மை

**தீவிர வேளாண்மை முறையில் நெற்பயிர் அதிகமாக விளைவிக்கப்படும். விளைநிலம் சிறியதாக இருந்தாலும் அவற்றில் விவசாயிகள் தீவிர வேளாண்மை செய்வர். வணிக வேளாண்மை பரந்த வேளாண்மை எனப்படுகிறது. இவ்வகையில், பயிர்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. பயிரிடுவதற்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.**

ஆதிரா

ஒரு நாட்டின் வளர்ச்சியும், முன்னேற்றமும் அதன் பொருளாதாரம் கனிம வளம், இயற்கை வளங்களால் நிர்ணயிக்கப்படுகின்றன. உணவை உற்பத்திச் செய்வதும் கால்நடைகளை வளர்ப்பதும் வேளாண்மை ஆகும். வேளாண்மை ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் அச்சாணி போன்றது எனலாம்.

மக்களின் அத்தியாவசியமான உணவுப் பொருள்களை உற்பத்திச் செய்கிறது. நாட்டின் பணவீக்கத்தைத் தவிர்க்க வேளாண்மை உதவுகிறது. வேளாண் மூலப்பொருளால் தொழில்துறை வளர்கின்றது. வேளாண்மை ஒரு நாட்டின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கிறது.

தொடக்கக்காலங்களில் உணவைத் தேடி அலைந்த மனிதன் சமூகமாக வாழ்வதற்குக் கற்றுக்கொண்டான். மனிதன், தேவைகள் அதிகரிக்க வேளாண்மையை ஒரு தொழிலாகச் செய்யத் தொடங்கினான்.

தொடக்ககாலங்களில் ஆற்றோரங்களில், நீர் வளம் அமைந்த பகுதிகளில் ஆரம்பமான வேளாண்மை, உலோகத்தின் பயன்பாட்டுக்குப் பின் பல இடங்களிலும் பரவ ஆரம்பித்தது. மனிதர்கள் தனது தேவைக்குப் போக எஞ்சிய உணவுப் பொருள்களைக் கால்நடைகளுக்கு உணவாகக் கொடுத்தனர்.

வேளாண்மை செய்ய கால்நடைகள் உதவின. மேலும், மனிதனுக்கும் கால்நடைகளால் பால், இறைச்சி, தோல், உரோமம், உரம் போன்ற பல்வேறு பயன்கள் கிடைத்தது. காலங்கள் செல்லச் செல்ல வேளாண்மையில் வளர்ச்சி ஏற்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிலங்களை உழுவதற்கும் அறுவடை செய்வதற்கும் போர் அடிப்பதற்கும் நீராவி இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மரபியலில் ஏற்பட்ட கண்டுபிடிப்புகளால் கலப்பின, வீரிய ஒட்டு விதைகள் உருவாக் கப்பட்டன. வேளாண்வகை என்பது ஒருங்கிணைப்புத்தன்மையையும் வேளாண்மையைக் கையாளும் முறையினையும் அங்கு விளையும் பயிரினையும் பொறுத்து வகைப்படுத்தினர். அவை தன்னிறைவு வேளாண்மை, மாற்றிட வேளாண்மை, தீவிர வேளாண்மை, வணிக வேளாண்மை, கலப்புப்பண்ணை வேளாண்மை என்பனவாகும். தன்னிறைவு வேளாண்மை முறையில் விவசாயிகள் தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் தேவையான அளவு பயிர்களை விளைவிப்பர்.

தன்னிறைவு வேளாண்மை மலைவாழ் மக்களுக்கு சிறிய குழுமங்களால் மேற்கொள்ளப்படும் வேளாண்மை முறையாகும். மாற்றிட வேளாண்மை என்பது இடப்பெயர்வு வேளாண்மை எனப்படும். ஓரிடத்தில் நிலையாக இல்லாமல் சில காலம் கழித்து வேற்றிடம் சென்று பயிரிடுவர்.

தீவிர வேளாண்மை முறையில் நெற்பயிர் அதிகமாக விளைவிக்கப்படும். விளைநிலம் சிறியதாக இருந்தாலும் அவற்றில் விவசாயிகள் தீவிர வேளாண்மை செய்வர். வணிக வேளாண்மை பரந்த வேளாண்மை எனப்படுகிறது. இவ்வகையில், பயிர்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. பயிரிடுவதற்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இம்முறையில் அதிகம் பயிரிடப்படும் பயிராகக் கோதுமை கருதப்படுகிறது.

கலப்புப்பண்ணை வேளாண்மை முறையில் பயிர் விளைவித்தல் மற்றும் கால்நடை வளர்த்தல் ஆகிய இரண்டு தொழில்களும் நடைபெறுகின்றன. இதனை ஒருங்கிணைந்த பண்ணை முறை என்றும் அழைப்பர். வேளாண்மை வளர்ச்சிக்கு வீரிய விதைகள், தரமான உரம், மண் வளம், போதிய நிதி வசதி, நவீன கருவிகள், எந்திரங்கள், நீர்வளம் முதலியவை அவசியமாகும். இவற்றுள் தலையானது நீர் வசதியாகும்.

நீர்ப்பாசனம் வேளாண்மைக்கு முதுகெலும்பு போன்றது. உணவுப்



பயிராகிய நெல்லுக்கும் பணப்பயிராகிய கரும்புக்கும் அன்னாசி, காய்கறி, போன்ற பயிர்கள் செழிப்பாக வளர்வதற்கு அதிக நீர் தேவைப்படுகிறது. நம் நாட்டில் வற்றாத நதி வளம் மிகுந்துள்ளது. எனினும், நீர் வளத்திற்கு அடிப்படை மழை. மழையை நம்பி விவசாயிகள் விவசாயம் செய்ய வேண்டியுள்ளது. மழை நீரைச் சேமித்துப் பயிர்களுக்குப் பாய்ச்சும் நீர்ப்பாசன முறைகள் இடத்திற்கு இடம் மாறுபடும்.

அவற்றுள் முக்கியமானவை கிணற்றுப் பாசனம், ஏரிப்பாசனம், கால்வாய்ப் பாசனம் என்பனவாகும். கிணறுகள் மேல்மட்டக் கிணறுகள், குழாய்க் கிணறுகள் என இருவகைப்படும். மேல்மட்ட கிணறுகளை நிலத்தடி நீர் கிடைப்பதைப் பொறுத்து எவ்விடத்திலும் எளிதில் தோண்டிப் பயன்படுத்தலாம். மின்சார வசதியுடன் பயிர்களுக்குக் கிணற்று நீர் இறைக்கப்படுகின்றன. தொடர்ந்து, நிலத்தில் ஆழ்துளை இட்டு இரும்பு அல்லது நெகிழிக் குழாய்களைப் பொருத்தி, எரிவாயு அல்லது மின்சார முறையில் இறைப்பது குழாய்க் கிணறு ஆகும்.

நிலத்தடி நீர் அதிகமாக உள்ள இடங்களில் மட்டும் குழாய்க் கிணறுகள் பயன் தரும். ஏரிப்பாசனம் என்பது தாழ்வான பகுதிகளில், பள்ளங்களின் கரையைப் பலப்படுத்தி மழை நீரைத் தேக்கிப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதாகும். அடுத்ததாக, கால்வாய்ப்பாசனம். இஃது ஆற்று நீரை முறைப்படுத்தி வாய்க்கால்கள் வழியாக நிலங்களில் பாய்ச்சும் முறை ஆகும். சுருங்கக்கூறின், பண்டைக்காலத்தில் வேளாண் தொழில் முதன்மையானதாக இருந்தது. மேலும், நீர்ப்பாசனம், உழவு, எருவிடுதல், சேமிப்பு, விநியோகம் ஆகியவற்றில் முன்னேற்றகரமான செயல் திறன் கொண்டதாகத் திகழ்ந்தது.

# வடக்கில் சிறப்பாக நடந்த சிறு தானியத் திருவிழா



**சிறுதானியம் எனப்படுவது உருவில் சிறியதாக காணப்படும் தானிய வகைகளாகும். அதாவது வரகு, சாமை, கேழ்வரகு, திணை, குதிரைவாலி, பனி வரகு போன்றவையே சிறு தானியங்களாகும். சிறுதானியங்கள் நிறைந்த உணவுகளை உட் கொள்வதனூடாக பல்வேறு நோய்களிலிருந்து பாதுகாப்பை பெற முடியும். நாம் இன்று உணவில் எடுத்துக் கொள்ளும் நெல் மற்றும் கோதுமை போன்றவற்றை காட்டிலும் அதிகளவில் புரதம், நார், இரும்பு, சுண்ணாம்பு போன்ற சத்துக்கள் சிறுதானியங்களில் காணப்படுகின்றன.**

சிறுதானிய பண்ணையாளர்களை ஊக்குவிக்குமுகமாகவும் மற்றும்ஆரோக் கியமான சிறுதானிய உணவுகளை நுகர்வதனை ஊக்குவிக்குமுகமாகவும் சிறுதானிய பயிர் செய்கையாளர் ,ஆலோசகர் ,கொள்வனவாளர் மற்றும் ஏற்றுமதியாளர் என பலராலும் அறியப்பட்ட பல தடங்களிலும் பயணிக்கும் காரை நிரோஷன்அவர்களது முன்னெடுப்பில் புலிமச்சிநாத குளம், மாங்குளம் என்னும் முகவரியில் அமைந்துள்ள கே கே இயற்கை விவசாய பண்ணையில் சிறுதானிய திருவிழா ஒன்று 2024 எட்டாம் மாசம் 15 ஆம் தேதி நடத்தப்பட்டிருந்தது

மேற்படி நிகழ்வில் மாகாண விவசாய பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரன் முல்லைத்தீவு மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி ஜாமினி ஜசீலன், பிரதேச விவசாய போதனாசிரியர், பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாயத் திணைக்களக்கணக்காளர், அயல் பிரதேச விவசாய போதனா ஆசிரியர்கள், பிரதேச விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்திரா குழுமத்தின் தலைவரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் விவசாய பீடம் மற்றும் இலங்கை விவசாயக் கல்லூரி பரந்தன் வருகை விரிவுரையாளர் மகேஸ்வரன் ராஜிதன் தலைமையில் இந்த சிறுதானிய நிகழ்வு இடம்பெற்றது.

மாகாண விவசாய பணிப்பாளர் தனது உரையின் பொழுது பண்ணை உரிமையாளர் புலம்பெயர்ந்து வேறு நாட்டில் வசிப்பவர் ஆக இருந்த பொழுதிலும் விவசாயத்தின் மீது கொண்ட தீராத காதலினால் நிலத்துக்கு மீண்டும் வந்து இயற்கை முறை விவசாய பண்ணை ஒன்றை நடத்தி வருகின்றமை சிறப்பான அம்சம் என தெரிவித்தார் அவர் மட்டுமின்றி அவரது இந்த கனவுக்கு அவரது ஒட்டுமொத்த குடும்பமும் பக்கபலமாக இருப்பது இன்னும் சிறப்பு என்றார். நிகழ்வின் முக்கிய அம் சமாக பண்ணை உரிமையாளரின் மகள் ஐரோப்பிய நாடொன்றில் பிறந்து வளர்ந்த பொழுதிலும் தான் இந்த பண்ணையை பொறுப்பெடுத்து நடத்த விரும்புவதாக தனது. அழகான அனைவரும் ரசித்த ஐரோப்பிய தமிழ் வரவேற்புரையில் குறிப்பிட்டு இருந்தமையை சுட்டி காட்டினார். சிறுதானியத்திற்கு இவ்வளவு ஏற்றுமதி டிமாண்ட் மற்றும் உள்நாட்டு கொள்வனவு தேவை இருக்கின்ற பொழுது இனிவரும் காலங்களில் சிறுதானியங்களின் பயிர் செய்கை அதிகரிப்பு நோக்கிய திட்டங்கள் மாகாண துணைக்களத்தினால் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என உறுதி அளித்தார்.

மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி ஜாமினி யசீலன் அவர்கள் தனது உரையில் இவ்வாறான புதிது புனையும் விவசாயிகள் உடன் மாவட்ட விவசாய பணிமனை நிச்சயம் கூடவே இருக்கும் என உறுதி அளித்தார்.

பண்ணையாளரினால் வேறு பிரதேசங் களில் இருந்தும் வேறு நாடுகளில் இருந்தும் கொண்டு வந்து வெற்றிகரமாக செய்கை பண்ண பட்டிருந்த ராஜஸ்தான் கம்பு, தினை , இறுங்கு, நாட்டு கம்பு, சிவப்பு அமரந்தம் உட்பட்ட பல்வேறு புதிய சிறுதானி யங்கள் பங்குபற்றுனர்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டன.

இறுதியில் சிறுதானியத்தில் செய்யப்பட்ட வரகு கூட்டு சாதம் சாமை இனிப்பு பொங்கல் தினை லட்டு கம்பு முறுக்கு என்பனவற் றுடன் மோர் கலந்த கம்பங்கூழ் அனை வருக்கும் பரிமாறப்பட்டன.

இவ்விழாவினை சிறப்பிப்பதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சிறுதானிய உற்பத்தியாளர்களும்சிறுதா னிய உணவு உற்பத்தியாளர் பலரும் ஆர்வலர் களும் என பல வகையான மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறுதானியம் எனப்படுவது உருவில் சிறியதாக காணப்படும்தானிய வகைகளாகும். அதாவது வரகு, சாமை, கேழ்வரகு, திணை, குதிரைவாலி, பனி வரகு போன்றவையே சிறு தானியங்களாகும்.

சிறுதானியங்கள்நிறைந்த உணவுகளை உட் கொள்வதனூடாக பல்வேறு நோய்க ளிலிருந்து பாதுகாப்பை பெற முடியும். நாம் இன்று உணவில் எடுத்துக் கொள்ளும்

நெல் மற்றும் கோதுமை போன்றவற்றை காட்டிலும் அதிகளவில் புரதம், நார், இரும்பு, சுண்ணாம்பு போன்ற சத்துக்கள் சிறுதானியங்களில் காணப்படுகின்றன.

ஆரம்ப காலத்தில், நம் முன்னோர்களால் உண்ணப்பட்டு வந்த ஆரோக்கியமான உணவுகளில் முதல் இடத்தினைப் பிடிப்பது சிறுதானியங்கள் ஆகும். இந்த சிறுதானியங்கள் நம் பாரம்பரிய உணவு முறையின் அரிசியாகக் கருதப்படுகிறது. சத்து மிகுந்த சிறுதானியங்கள் மிதமான தட்ப வெப்ப நிலையிலும் சாதாரண மண் வளத்திலும் செழித்து வளரும்.

சிறுதானியங்களில் அதிக அளவில் ஊட்டச்சத்து நிறைந்துள்ளன. இவற்றில் 25 சதவீதம் புரதமும் அதிக அளவு நார்ச்சத்தும் உள்ளது. மேலும் இவை வைட்டமின் 'ஈ', வைட்டமின் 'பி' காம்ப்ளக்ஸ், நியாசின், தயமின். மற்றும் ரிபோபிளேவின் போன்றவற்றிற்கு மிகப்பெரிய ஆதாரமாக விளங்குகின்றது.

கம்பு, சோளம், வரகு, சாமை, தினை, குதிரைவாலி, கேழ்வரகு போன்றவையே சிறுதானிய உணவுகள் ஆகும். இவை அனைத்தும் அதிக ஆற்றலை தரக்கூடியவை. இதில் புரதச்சத்து மற்றும் நார்ச்சத்து மிகுந்தும், இரும்பு, கால்சியம் மற்றும் வைட்டமின்களை கொண்டது.





நாம் தினமும் உண்ணும் உணவுகளில் ஊட்டச்சத்துமிக்க சிறு உணவுகளை எடுத்துக் கொள்வதால் நமது சமூகத்தையும் குடும்பத்தையும் கூட வலுப்படுத்த முடியும். மேலும் நாம் சிறு தானியங்களை அதிகளவில் பயிரிடுவதன் மூலமும் எம்மையும் எமது சமூகத்தையும் பல்வேறு கொடிய நோய்களிலிருந்து காத்து கொள்ள முடியும்.

சிறுதானிய திருவிழாவிற்கான கிளிநொச்சியிலிருந்து மாங்குளத்திற்கான துவிச் சக்கர வண்டி பயணம்

மேற்படி முக்கியத்துவம் வாய்ந்த சிறுதானிய திருவிழாவிற்கு வலு சேர்க்கும் முகமாக விழிப்புணர்வு துவிச் சக்கர வண்டி பயணம் ஒன்று கிளிநொச்சியிலிருந்து மாங்குளம் குறித்த பண்ணை வரைக்கும் விவசாய ஆர்வலர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி மற்றும் குளியாப்பட்டிய பல்கலைக்கழக கல்லூரி பண்ணை இயந்திரவியல் மாணவர்கள் என்ன பலர் பங்கு கற்றுதலுடன் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த நிகழ்வின் சிறப்பான முக்கிய அம்சம் ஒன்றாகும்.

நிலத்தில் விவசாய தன்னிறைவை நோக்கி புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதுடன் வேலை செய்யும் இந்திரா குழுமத்தின் ஏற்பாட்டில் மேற்படி துவிச்சக்கர வண்டி பயணம் கிளிநொச்சி அம்மாச்சி பாரம்பரிய உணவகம் ஒன்றிலிருந்து சரியாக காலை 6 மணி அளவில் கிளிநொச்சி மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி ஜெகதீஸ்வரி சூரியகுமார் மாவட்ட விவசாய சம்மேளனங்களின் தலைவர் திரு ஜதீஸ்வரன் கரீனாச்சி ரோட்டரி கழக உறுப்பினரும் முருகானந்தா கல்லூரி அதிபரும் ஆகிய திரு பங்கையச்செல்வன் நோயாள நலம்புரி சங்கத் தலைவர் ரூபிகாசன் ஜெகதீஸ்வரன் ஆகியோரின் கொடி அசைத்துடன் ஆரம்பம் ஆகியது.

இரணைமடுச் சந்தி முருகன் டி கோவில் கொக்காவில் மாங்குளம் வலுமடு வழியாக புழுமச்சிநாதகுளம் பகுதியை காலை 10:30 மணி அளவில் அடைந்த சைக்கிள் பவனியை வரவேற்று கொண்டு மேற்படி குறிப்பிடப்பட்ட சிறு தானிய திருவிழா நிகழ்வுகள் ஆரம்பம் ஆகியிருந்தன.

பாரம்பரிய உணவு பழக்கவழக்கங்கள் அரிசி விட்ட இந்த காலத்தில் இந்த சிறு தானிய உணவு திருவிழா என்பது பலரது கவனத்தையும் ஈர்த்திருக்கின்றது.



## றப்பர் பாலில் விழுந்து மறைந்த கண்ணீர் - 01

# இரு நூற்றாண்டு கால றப்பர் தோட்ட தொழிலாளர்களின் சோகக் கதை

சங்கா சிங்ஹ ஆரச்சி

1938 ஆம் ஆண்டு வெளிவந்த சமசமாஜ பத்திரிகை இந்நாட்டு இறப்பர் தோட்ட தொழிலாளர்களின் முதலாவது போராட்டத்தை இலங்கை வரலாற்றில் முதலாவது வேலை நிறுத்தப்போராட்டமென செய்தி வெளியிட்டிருந்தது. மேலும் அதே ஆண்டு ஜுலை மாதம் 13ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இவ்வேலை நிறுத்தம் சில நாட்கள் நீடித்த நிலையில் வெற்றிகரமாக நிறைவடைந்ததாகவும் மேலும் பதிவு செய்துள்ளது. அன்று முதல்86 வருடங்களாக தமது அடிப்படை உரிமைகளுக்காக போராடி வந்த இறப்பர் தோட்ட தொழிலாளர்கள் அன்று சிந்திய கண்ணீருக்கான விலை அன்றைய நாளை விட இன்று அதற்கான பெறுமதி கூடியுள்ளதா?

காலனித்துவ ஆட்சியாளர்களினால் இந்நாட்டிற்கு முதலாவதாக கோப்பி பயிர்ச் செய்கைக்கும் இரண்டாவதாக தேயிலை பயிர்ச்செய்கைக்கும் பின்னர் இறப்பர் பயிர்ச்செய்கைக்குமென தென்னிந்தி யாவிலிருந்து அழைத்து வரப்பட்ட தோட்ட தொழிலாளார்களுக்கு இன்றுடன் இருநூறு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

அவர்கள்இந்நாட்டிற்கு அழைத்துவரப்பட்ட யுகத்திலிருந்து கவனிப்பாரற்றும் காலனித் துவ ஆட்சிக்கு அடிமைப்படுத்தப்பட்டும், பிரஜா உரிமை, அவசரகால சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற சட்ட வரம்புகளினூடாக அவர்கள் அடக்கப்பட்டும், இனவாத வன்முறைச் செயல்கள், அரச பயங்கரவாதம், குடியேற்றங்கள் போன்ற நடவடிக்கைகளினூடாக அவர்கள் மீது பாரபட்சம் காட்டப்பட்டு நீண்டகாலமாக நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டிருந்தனர்.

உழைப்புச் சுரண்டப்பட்டு, தேசிய நெருக்கடிக்கு இரையாக்கப்பட்ட அம்மக்கள் இரு நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக இரத்தம், கண்ணீர் மற்றும் வியர்வை சிந்தி சில சந்தர்ப்பங்களில் உயிர்களை காவு கொடுத்தும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கி இன்றும் குறைந்தபட்ச வாழ்க்கைத்தரத்திலே வாழ்ந்து வருகின்றனர். ஆனாலும் இலங்கையின் பொருளாதாரத்தினை வளப்படுத்திய அவர்களுக்கு நலன்புரி



திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தாலும் அவை அவர்களை சென்றடையவில்லை. இன்றும் அத்தொழிலாளர்களுக்கு உரிமை கொண்டாட ஓர் அங்குலம் நிலம் கூட இல்லை. வாழ்க்கைச் செலவுக்கேற்ப ஊதியம் இல்லை.

### இறப்பர் பயிர்ச்செய்கை ஆரம்பம்

தென் அமெரிக்காவின் அமேசான் காடுகளில் வளர்ந்த இறப்பர் மரங்கள் காரணமாக அதனையொட்டிய உற்பத்திகள் பிரேசிலில் மிகவும் பிரபல்யமடைந்தன. 1876ல் சேர் ஹென்றி விக்கம் (Sir henry Wickam) ஆசியாவின் பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு இறப்பர் பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்திய முன்னோடியாவார். 1881ஆம் ஆண்டு ஜோர்ஜ் த்வெய்டீஸ் (George Thwaities) தலைமையில் ஹெனரத்கொட (கம்பஹ) என்ற பூங்காவில் இந்நாட்டில் முதலாவது இறப்பர் மரக்கன்று நாட்டப்பட்டது. ஆனாலும் அதுவரை காலமும் இந்நாட்டில் செழிப்புற்றிருந்த தேயிலை பயிர்ச்செய்கை காரணமாக இறப்பர் உற்பத்தி முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லையாயினும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட மோட்டார் வாகண உற்பத்தி அதிகரிப்பின் காரணமாக ஈரவலய பிரந்தியங்களில் இறப்பர் பயிர்ச்செய்கை விஸ்தரிக்கப்பட்டது. பின்னர் ஏற்றுமதிப் பணப்பயிர்களில் நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்திய இறப்பர் பயிர்செய்கை தேயிலை உற்பத்திக்கு அடுத்தப்படியாக இரண்டாவது ஏற்றுமதிப் பயிராக வளர்ச்சி கண்டது. இதனூடாக 1909 ஆம் ஆண்டில் காலனித்துவ தோட்ட உரிமையாளர்களுடன் இணைந்து களுத்துறையில் இறப்பர் ஆராய்ச்சி நிலையத்தை நிறுவினர்.

1956 ஆம் ஆண்டு ஆண்டு கியுபா புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து புதிய சோசலிச அரசின் கைத்தொழில் அமைச்சரான அர்னஸ்டோ சேகுவேரா இலங்கைக்கு விஜயம் செய்து களுத்துறை யாஹலதென்ன தோட்டத்தில் இறப்பர் கைத்தொழில் தொடர்டபாக ஆய்வு செய்துள்ளமை, அறுபதாம் ஆண்டு காலப்பகுதியில் உருவான சீன-இலங்கை இறப்பர்-அரிசி உடன்படிக்கையும் இறப்பர் உற்பத்தி எந்தளவு அபிவிருத்தி அடைந்து காணப்பட்டதென்பதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

சபரகமுவ மாகாணத்தின் கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய இரு மாவட்டங்களிலே அதிகளவில் இறப்பர் உற்பத்தி நடைபெறுகின்றது. இரத்தினபுரி மாவட்டத்தில் 435 இறப்பர் தோட்டங்கள்

காணப்படுகின்றன. அவற்றில் 51 தோட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன. கேகாலையில் காணப்படுகின்ற தோட்டங்களின் எண்ணிக்கை 354. கைவிடப்பட்டுள்ள தோட்டங்கள் 61. களுத்துறை மாவட்டத்தில் 302 தோட்டங்கள் உள்ளன. அவற்றுள் 49 தோட்டங்கள் தற்போது வரை கைவிடப்பட்டுள்ளன. 153 தோட்டங்கள் காலி மாவட்டத்தில் காணப்படுகின்றன. அவற்றில் 21 கைவிடப்பட்டுள்ளவை. மாத்தறை மாவட்டத்தில் 118 தோட்டங்கள் உள்ளன, அதில் 09 தோட்டங்கள் கைவிடப்பட்டுள்ளவை. கொழும்பு மாவட்டத்தில் 103 தோட்டங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 14 தோட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன. 1,30 000 ஹெக்டெயர் தோட்டங்களில் இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கேகாலை மாவட்டத்தில் 49,919 ஹெக்டயாருக்கும் அதிகமான நிலப்பரப்பில் இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 34 381 ஹெக்டயர் இரத்தினபுரி மாவட்டத்தில், 32,644 ஹெக்டயர்



களுத்துறை மாவட்டத்தில், கொழும்பில் 9,954 ஹெக்டயர். இவற்றுக்கு மேலதிகமாக மொனராகலை மாவட்டத்தில் மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இறப்பர் தோட்டங்கள் அமைந்துள்ளன. அத்துடன் குருணாகல் மாவட்டத்தில் 250ற்கும் ஹெக்டேயருக்கு அதிகமான ஐந்து இறப்பர் தோட்டங்கள் இருக்கின்றன.

அகலவத்தை, பலங்கொடை, பொகவன்தலாவ, எல்பிட்டிய, ஹப்புகஸ் தென்ன, நமுனுகுல, ஹொரன, கஹவத்தை, கேகாலை, களனிவெளி, கொட்டகலை, மல்வத்தை, உடபுஸ்ஸலாவை, வட்டவலை, துன்ஹிந்தை, போன்ற பெருந்தோட்ட நிறுவனங்கள் இறப்பர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

## புதிய தொழிலாளர் வர்க்கம்

இலங்கை தோட்ட தொழிலாளாகளின் வரலாற்றில் முதலாவது வேலை நிறுத்தப் போராட்டம் இறப்பர் தோட்டத் தொழிலாளாகள் மூலமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. போராட்ட குணங்கொண்ட தொழிற்சங்க தலைவரான எம்.ஜி. மெண்டிஸின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய லயனல் சரத் இவ்வாறு தெரிவிக்கின்றார்: 'எம்.ஜி. கிரன்திடியில் வசிப்பதற்கு ஆரம்பித்து



ஐந்து மாதங்கள் கடந்த நிலையில் அங்கு வெள்ளைக்காரர்களின் தோட்டத்தில் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை வழிநடத்தியதும் ஏற்பாடு செய்ததும் எம்.ஜி. 1938 ஆம் ஆண்டு ஜுலை 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இவ்வேலை நிறுத்தப் போராட்டம் சில நாட்களிலே வெற்றியுடன் நிறைவு பெற்றதுடன் இலங்கை வரலாற்றின் தோட்டத் தொழிலாளர்களது முதலாவது 'ஸ ட்ரைக்' என சமசமாஜ பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

சகோதரர் எம்.ஜியின் அனுசரனையில் அண்ணாசிகல தோட்ட தொழிலாளர்களினால் இலங்கை வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது வேலைநிறுத்தப் போராட்டம். பஸ்பாகை கோரளையைச் சேர்ந்த அனைத்து தோட்ட தொழிலாளர்களுக்கும் இவர்களின் ஒன்றினைந்த வெற்றி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

முன்னொரு காலத்தில் இறப்பர் தோட்ட தொழிலாளர்களின் வெற்றி பூமியாக வரலாற்றுத் தடத்தை கொண்டுள்ள களுத்துறை மாவட்டத்தின் இன்றைய நிலைமை முற்றிலும் வேறுபட்டு காணப்படுகின்றது.

'அன்று எமது மக்கள் தமிழ்நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டு தோட்ட லயன் காம்பராக்களில் தங்க வைக்கப்பட்டனர். இன்றும் எமது வாழ்க்கையின் நிலைமை அவ்வாறே காணப்படுகின்றது" என களுத்துறை மாவட்ட பதுரெளிய அஸ்வெலிய தோட்ட அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் எஸ். பத்மநாதன் தெரிவிக்கின்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், அன்று காணப்பட்ட நிலைமையை விட இன்று அவர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

'அன்றைய நாளில் ஒரு மரணம் சம்பவித்தால் சவப் பெட்டிக்கான செலவை தோட்ட நிர்வாகம் வழங்கியது. மயானத்தை அமைத்துக் கொள்வதற்கு சீமெந்து தந்தனர். லயன்களில் வாழ்ந்த மக்களின் துணிகளை துவைப்பதற்கு அதனை எடுத்துச் செல்ல வாரத்தில் ஒரு நாள் டோபி வருவார். முடி வெட்டுவதற்கு பாபர் வருவார். அவர்களுக்கான சம்பளத்தை தோட்டம் வழங்கியது. கோயில் திருவிழாக்களின் செலவை தோட்ட நிர்வாகம் ஏற்றும் கொள்ளும். சம்பளத்தில் அறவிட்டுக்கொள்ளும் வகையில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இன்று எவ்வித சலுகைகளும் இல்லை."

பத்மநாதனின் கூற்றுப்படி மானியங்கள் ரத்துச்செய்யப்பட்டமை அனைத்து தோட்டங்களுக்கும் பொதுவானது. அதிகரித்துச் செல்கின்ற வாழ்க்கைச் செலவுக்கேற்ப வழங்கப்படுகின்ற 900 ரூபா இத்தொழிலாளர்களுக்கு எவ்விதத்திலும் போதுமானதல்ல. தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட ஆயிரம் ரூபா நாட் சம்பளம் இவர்களுக்கு வழங்கப்படவில்லை.

தமது குழந்தைகளுக்கு போசனைமிக்க ஒரு வேலை சாப்பாடு, அவர்களது கல்வித் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் கிடைக்கின்ற சம்பளம் போதுமானதல்லவென, புற்று நோய் காரணமாக இருபத்தி நாண்கு வருட பால் வெட்டுத்தொழிலுக்கு விடைகொடுத்துள்ள செல்வி கூறுகின்றார்.

'இப்பொழுது கணவர் மட்டும் தான் வேலைக்குப் போகிறார். ஆனாலும் தோட்டத்தில் தினந்தோறும் வேலை கிடைப்பதில்லை. மழை பெய்கின்ற நாட்களில் எதுவும் இல்லை." சிந்தாமணி, மாவத்தகமை மொறத்தன்னை தோட்டத்தில் முப்பந்தைந்து வருடங்களாக மிகவும் சுறுசுறுப்புடன் ஒவ்வொரு இறப்பர் மரத்தடியிலும் பால் சேகரிக்கும் தேகாரோக்கியமிக்க பெண்ணொருவராவார். இன்றைக்கு இருப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் புவியியல் ரீதியில் குருணாகல் மாவட்டத்தில் தேயிலை பயிர் நிலமாய் காணப்பட்ட மொறத்தன்னை தோட்டம் இன்று பின்தங்கிய தோட்டமாகக் காணப்படுகின்றது. ஏனைய இறப்பர் தோட்டங்களைப் போன்று மொறத்தன்னை தோட்டத்திலும் இறப்பர் பால் சேகரிப்பதிலும் பால் வெட்டுவதிலும் பெண்களே முன்னணி வகிக்கின்றனர்.

அடுத்த வாரமும்...

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

### உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2024இல் வெளியிடப்பெற்றது.